ISSN 1391-9504

Vijey விஜய

# விஜய்

10.09.2014 - மலர் 11, இதழ் 28


PUBLIC LIBRARY JAFFNA

## உலகின் 10 செல்வந்த நாடுகள்



## நாட்டிற்கு நாடு மாறுபடும் உணவுப் பழக்கங்கள்

இவ்வார கார்ட்டூன் படம்...



பண்டைய மனிதர்களின் மரபணு பகுப்பாய்வுகள்





உலகின் மிகப் பெரிய இறால் இனம்



'பூ' வடிவில் 'பூச்சி'

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1) இங்கு மொத்தம் எத்தனை 'கப்கேக்குகள்' (cupcakes) உள்ளன?

..........................

2) இந்த கப்கேக்குகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?

1. இரண்டு வகைகள்
2. மூன்று வகைகள்
3. நான்கு வகைகள்
4. ஐந்து வகைகள்

3) கப்கேக்குகள் ................. சுவையுடையவை.

1. இனிப்பு
2. புளிப்பு

1) A எனக் குறிக்கப்பட்டுள்ள கடிகாரம் காட்டி நிற்கும் நேரம் யாது?

.......................


2) A கடிகாரத்தில் ஒரு பிழை உள்ளது. அதில் X அடையாளமிட்டுக் காட்டுக.

3) B கடிகாரத்தில் 02:35 எனும் நேரத்தைக் குறித்துக் காட்டுக.

4) இப்போது கடிகாரம் காட்டிநிற்கும் நேரம் 09:20 என வைத்துக் கொள்வோம். இன்னும் 20 நிமிடங்களில் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

.................................








1) கிழுள்ள சொற்களை, பொருத்தமான படங்களுக்குக் கீழ் எழுதுக.

rainy, hot, windy, sunny, snowy, cloudy, cold, lightning, stormy

2) மின்னல் தாக்கத்தைக் குறித்துக் காட்டும் படத்தில் '✓' அடையாளமிடுக.




உ+ம்:

1) சின்னத்தம்பி, நீலநிற டீ-ஷேர்ட் அணிந்துள்ளான். அவனைக் குறிக்கும் படம் எவ்வெழுத்திற்குரியது?

விடை: A

2) அண்ணா, கபிலநிற கொலர் கொண்ட டீ-ஷேர்ட் அணிந்துள்ளார். அவரது படம் எந்த எழுத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது?

விடை: ...........





3) கருமையான நீண்ட கூந்தலையுடையவர்தான் எனது அக்கா. அவரது படத்தினைக் குறிக்கும் எழுத்து யாது?

விடை: ..........

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் மிகப் பெரிய இறால் இனம்

## நியூஸிலாந்து கடற்பரப்பில் கண்டுபிடிப்பு...!

பிரித்தானியாவின் எபர்டீன் பல்கலைக்கழகத்தின் கடல் ஆய்வுக்குழுவொன்று, நியூஸிலாந்தின் ஆழ்கடற்பரப்பில் அபூர்வ உயிரினமொன்றைக் கண்டுபிடித்துள்ளது. இது உலகின் மிகப் பெரிய இறால் இனமாக இருக்கலாம் என அக்குழுவினர் கருதுகின்றனர்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

இந்த அபூர்வ உயிரினமானது; இறால், நண்டு, சிங்கி இறால் போன்ற உயிரினங்களை உள்ளடக்கியிருக்கும் 'ஓடுடைய உயிரினங்கள்' (Crustaceans) எனும் கணுக்காலிகளில், 'பன்முகக்காலி' (Amphipod) வகைக்குரியதாகும்.

இறால் இனத்திற்கு சமமான தோற்றத்தைக் கொண்ட இந்த ராட்சத உயிரினம், 11 அங்குலம் நீளம் கொண்டது.

**"ஆழ்கடலுக்கடியில் அனுப்பிய பொறியை மீண்டும் கப்பலின் மேற்பரப்பிற்கு கொண்டுவருகையில் நாம் பேராச்சரியம் அடைந்தோம். இறால் இனத்திலும் இந்தளவு பெரியதொன்றை இதற்கு முன் நாம் பார்த்ததில்லை."**

நியூஸிலாந்து நாட்டிற்கு வடக்கே 4 மைல் தூரத்தில் ஆழமான கடற்பரப்பில் இருந்து இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.கடல்வாழ் உயிரின ஆய்வுகளின்போது, ஏதேனுமொரு புதிய உயிரினத்தைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வொன்றை மேற்கொள்வதாக இருந்தால், அதனைப் பிடிப்பதற்காக விசேட பொறி ஒன்றை ஆய்வுக்குழுவினர் பயன்படுத்துவர். அவ்வாறே, கடலுக்கடியில் காணப்படும் இத்தகைய உயிரினங்களைப் படம் பிடிப்பதற்கென்று விசேட வினைத்திறன் மிகு கெமராக்களும் பயன்படுத்தப்படும். இத்தகைய நெறிமுறைகள் இந்த ஆய்வின்போதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. அதற்கமைய, எபர்டீன் பல்கலைக்கழக 'ஓஷன்லெப்' எனும் சமுத்திர ஆய்வுகளுக்கான ரசாயன கூடத்தால் தயாரிக்கப்பட்ட பாரிய பொறி ஒன்றைப் பயன்படுத்தும் வாய்ப்பு இக்குழுவினருக்கு கிடைத்தது. இந்த பொறியைப் பயன்படுத்தி கடலுக்கு அடியில் 6 மைல் தூரம் வரை இவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். அப்போதுதான் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. ஏனெனில், நத்தை மீனினத்தைக் கண்டுபிடிப்பதே இந்த ஆய்வுத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். எனினும், அந்த மீனினம் கண்டுபிடிக்கப்படவில்லை. மாறாக, சற்றும் எதிர்பாராத விதத்திலேயே இந்த அபூர்வ உயிரினம் அந்தப் பொறியில் சிக்கியுள்ளது.



எபர்டீன் பல்கலைக்கழக கலாநிதி எலன் ஜேமீசன், பொறியில் சிக்கிய ராட்சத இறாலொன்றை கையில் வைத்திருக்கின்றார்.



பொறியில் சிக்கிய ராட்சத இறால்கள் சில...

இந்த ஆய்வுக்குழுவுக்கு தலைமை தாங்கும் கலாநிதி எலன் ஜேமீசன் இது பற்றிக் கூறுகையில்; "ஆழ் கடலுக்கடியில் அனுப்பிய பொறியை மீண்டும் கப்பலின் மேற்பரப்பிற்கு கொண்டு வருகையில் நாம் பேராச்சரியம் அடைந்தோம். நாம் இதனை நத்தை மீன் என்றே முதலில் நினைத்தோம். எனினும், சில நிமிடங்கள் சென்ற பின்தான், இது வேறோர் உயிரினம் என புரிந்துகொண்டோம். இந்த அற்புதமான உயிரினம் இறாலைப் போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தது. இறால் இனத்திலும் இந்தளவு பெரியதொன்றை இதற்கு முன் நாம் பார்த்ததில்லை. இது 11 அங்குல நீளத்தில் காணப்பட்டது. எமது பொறியில் இத்தகைய ஏழு உயிரினங்கள் அகப்பட்டிருந்தன. எமது விசேட கெமராவின் மூலம் ஆழ்கடலுக்கடியில் இந்த ஏழு உயிரினங்களும் நடமாடும் காட்சியை பதிவு செய்துள்ளோம்'' என்றார்.



11 அங்குலம் நீளம் கொண்ட ராட்சத இறால்.

இது குறித்து கலாநிதி எலன் மேலும் விபரிக்கையில்; "இது எமக்குப் பெரும் வியப்பாக இருந்தது. இந்த கடற்பரப்பில் இதற்கு முன்னர் இரு தடவைகள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். ஆனால், ஒருபோதும் இந்த உயிரினத்தை நாம் காணவில்லை'' என்றார்.

**தமிழ் FM இல்**

**'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...**

**'விஜய்' சந்தா பரிசைப் பெறுங்கள்...!**



விஜய்

த தமிழ் fm

**தமிழ் FM வானொலியில் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 3 மணியிலிருந்து 5 மணிவரை ஒலிபரப்பாகும் 'ஆறாம் அறிவு' என்ற மாணவர்களுக்குப் பொருத்தமான அறிவுத் தேடல் நிகழ்ச்சியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளித்து, 'விஜய்' பத்திரிகை வழங்கும் சந்தா பரிசை வெல்லும் வாய்ப்பினைப் பெறுங்கள்!**

தமிழ் FM வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எறும்பு சாப்பிடுகிறது...

சீத்தனூரில் இனிப்புக் கடை ஒன்று இருந்தது. சிறுவர்கள் அந்தக் கடையில் இனிப்பு வாங்கிச் சாப்பிடுவர். அந்தக் கடைக்காரனுக்கு சிறுவர்களைக் கண்டால் பிடிக்காது. அவர்கள் மீது எரிந்து விழுவான். அவர்களால் ஏதேனும் வேலை ஆக வேண்டி இருந்தால்மட்டும் அவர்களை அழைப்பான்.

"இந்த வேலையை முடியுங்கள், இனிப்புத் தருகிறேன்" என்பான். அவர்கள் அதைச் செய்து முடித்ததும் இனிப்பைக் கொடுக்காமல் அவர்களை விரட்டிவிடுவான். இதனால், சிறுவர்களுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது.

அக்கடைக்காரன் தினமும் நண்பகல் நேரத்தில், தனது கடைக்குள் படுத்து நன்றாகத் தூங்குவான். அப்போது சிறுவனான அவனுடைய மகன் கடையைப் பார்த்துக்கொள்வான்.

"ஒருமுறை அந்தக் கடைக்காரனுக்கு பலகாரங்கள் வைப்பதற்காக வாய் அகன்ற பானைகள் சில தேவைப்பட்டன. அந்தப் பானைகளைக் கொள்வனவு செய்து கடைக்கு எடுத்துவர வேண்டுமே... என்ன செய்வது என்று சிந்தித்தான். வழக்கம் போலச் சிறுவர்களை ஏமாற்றுவோம் என்று நினைத்து, அவர்களை அழைத்தான்.

"மண்பாண்டம் செய்பவர்களிடம் சில பானைகள் உள்ளன. அவற்றைக் கவனமாக எடுத்து வர வேண்டும். எடுத்து வருகிறீர்களா?" என்று கேட்டான்.

"எடுத்து வந்தால் எல்லோருக்கும் நிறைய இனிப்புத் தருவீர்களா?" என்று கேட்டான் அவர்களில் ஒருவன். "முதலில் கொண்டு வாருங்கள். பிறகு பார்க்கலாம்" என்றான் கடைக்காரன். நிறைய இனிப்புக் கிடைக்கப் போகிறது என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்த சிறுவர்கள், ஒவ்வொரு பானையாக கடைக்குக் கொண்டு வந்தனர்.

"எங்களுக்குத் தருவதாகச் சொன்ன இனிப்பைத் தாருங்கள். நாங்கள் சாப்பிட்டுக்கொண்டே செல்கிறோம்" என்றனர் சிறுவர்கள். "நான் எப்போது உங்களுக்கு இனிப்புத் தருவதாகச் சொன்னேன். நீங்கள் கேட்டதற்கு, கொண்டு வாருங்கள் பிறகு பார்க்கலாம் என்றுதானே சொன்னேன். இப்போதும் அதைத்தான் சொல்கிறேன். பிறகு பார்க்கலாம்" என்று அவர்களை விரட்டினான் கடைக்காரன். தாங்கள் மீண்டும் ஏமாந்துவிட்டதை எண்ணிப் புலம்பியபடியே அங்கிருந்து சென்றனர் சிறுவர்கள்.

அப்போது அந்த வழியாக வந்த கோபால் என்பவர், "பிள்ளைகளே! ஏன் அழுது கொண்டே செல்கிறீர்கள்?" என்று கேட்டார். "கோபால் மாமா! அந்த இனிப்புக் கடைக்காரர் எங்களை ஏமாற்றிவிட்டார்" என்று நடந்ததை எல்லாம் சிறுவர்கள் கூறினர்.

"கவலை வேண்டாம்! உங்களுக்குக் கிடைக்க வேண்டிய இனிப்பைவிட அதிகமாகவே கொண்டு வருகிறேன். ஆனால், நீங்கள் யாரும் அந்தக் கடைக்குள் வரக் கூடாது, வெளியே நில்லுங்கள்" என்று கூறிவிட்டு கோபால் கடைக்குள் நுழைந்தார்.அப்போது கடைக்காரனின் மகன்தான் கடையைக் கவனித்துக்கொண்டிருந்தான். உள்ளே இருந்த அறைக்குள் கடைக்காரன் தூங்கிக்கொண்டிருந்தான்.

இனிப்புப் பாத்திரத்திற்குள் கையை விட்ட கோபால், இனிப்புகளை எடுத்துச் சாப்பிட்டார். இதைப் பார்த்த சிறுவன், "என்ன இனிப்பை எடுத்து சாப்பிடுகிறீர்கள்? பணம் தராமல் எதையும் தொடக்கூடாது" என்று கத்தினான்.

"தம்பி! உன் தந்தைக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் இப்படி இனிப்பைச் சாப்பிடுவதை அவர் பொருட்படுத்தமாட்டார். என் பெயர் எறும்பு. நீ வேண்டுமானால் அவரிடம் இனிப்பை நான் சாப்பிடுவதாகச் சொல். அவர் ஒன்றும் சொல்லமாட்டார்" என்றார் கோபால்.

"அப்பா! "கடைக்குள் எறும்பு வந்துள்ளது. நான் சொல்லியும் கேளாமல் இனிப்பை எடுத்துச் சாப்பிடுகிறது" என்று கத்தினான் சிறுவன். தூக்கம் கலைந்ததால், எரிச்சல் அடைந்த கடைக்காரன், "மகனே! எறும்பு வந்தால் விரட்டு... இல்லையேல் அதை அப்படியே விட்டுவிடு. எறும்பைச் சமாளிக்க உன்னால் முடியாதா?" என்று கத்தினான். இதைக்கேட்ட கோபால் உள்ளுக்குள் சிரித்தவாறு, இனிப்பு நிறைந்திருந்த ஒரு பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த கடைக்காரன் மகன், "ஐயோ! அப்பா, நிறைய இனிப்புகளை எறும்பு எடுத்துச் செல்கிறது. பணம் எதுவும் தரவில்லை" என்று கத்தினான். இதைக்கேட்ட கடைக்காரன் கோபம் கொண்டான்.

"என் தூக்கத்தைக் கெடுக்காதே என்று எத்தனை முறை சொல்வது? நான் எழுந்து வந்தால் உன் தோலை உரித்துவிடுவேன். எறும்பு இனிப்பை எடுத்துச் செல்வதற்காக, யாராவது கவலைப்படுவார்களா? போனால் போகட்டும் எவ்வளவு இனிப்பை எடுத்துச் சென்றுவிடப் போகிறது. பேசாமல் இரு" என்று கத்தினான். இனிப்புப் பாத்திரத்துடன் வெளியே வந்தார் கோபால். அங்கிருந்த சிறுவர்களுக்கு ஒன்றுக்கு இரண்டாக இனிப்புகளைக் கொடுத்தார். அவர்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டனர்.

"உங்களை ஏமாற்ற முயன்ற கடைக்காரனை நன்றாக ஏமாற்றிவிட்டேன்" என்ற கோபால் அங்கிருந்து புறப்பட்டார். தூக்கம் கலைந்து எழுந்த கடைக்காரர், விடயம் அறிந்ததும் குய்யோ, முய்யோ என கத்தினான். யார் அந்த எறும்பு என்று தெரியாமல் நொந்துபோனான்.

'பிறரை ஏமாற்றினால் நாமே ஏமாந்து போவோம்'



# தெனாலிராமன் கதைகள்



## மறுபிறவி

தெனாலிராமன் கொலை செய்யப்பட்டுவிட்டான் என்ற செய்தி ஊர் முழுவதும் காட்டுத்தீ போல் பரவியது. அப்போது சில அந்தணர்கள் மன்னரைச் சந்தித்து, "நியாயமாக ஓர் அந்தணர் கொல்லப்பட்டது மிகக் கொடிய பாவம். அவனது ஆவி தங்களுக்கும் எமது நாட்டிற்கும் கேடு விளைவிக்கும்" என்றனர். இதைக்கேட்டுக் கலங்கிய மன்னர், இதற்குப் பரிகாரம் என்ன" என்று அந்தணர்களிடம் கேட்டார். அதற்கு அவர்கள்,

"அமாவாசை அன்று நள்ளிரவு சுடுகாட்டிற்குச் சென்று பூஜை செய்தால் நலம்" என்றனர். உடனே மன்னர் ராஜகுருவை அழைத்து அமாவாசையன்று நள்ளிரவு சுடுகாட்டில் தெனாலிராமன் ஆவிக்கு பூஜை செய்ய உத்தரவிட்டார். இதைக்கேட்ட ராஜகுரு நடுநடுங்கி, "நடுக்காட்டில் நள்ளிரவு நேரத்தில் பூஜை செய்வது என்றால் எனக்குப் பயமாக இருக்கிறது" என்றார்.

"அப்படியென்றால் துணைக்கு சில புரோகிதர்களையும் அழைத்துச் செல்லுங்கள்" என மிகக் கண்டிப்புடன் மன்னர் கட்டளையிட்டார். மன்னர் கட்டளையை மீற முடியாத ராஜகுரு பயத்துடன் பூஜைக்கு ஒத்துக் கொண்டார். அமாவாசை அன்று நள்ளிரவு புரோகிதர்கள் சகிதம் சுடுகாட்டிற்குச் சென்று பூஜைகளை நடத்தினார். பூஜையின் இறுதியில் ராஜகுரு அங்கிருந்த மரத்தை மேல் நோக்கிப் பார்த்து, "தெனாலிராமனின் ஆவியாகிய பிரம்மராட்சசனே! எங்களுக்கு ஒரு தீங்கும் செய்யாதே... உன் ஆன்மா சாந்தியடைய பூஜை செய்துள்ளோம்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே மரத்திலிருந்து ஓர் உருவம் பயங்கரச் சத்தத்தோடு கீழே குதித்தது.

இதைப் பார்த்த ராஜகுருவும் புரோகிதர்களும் பயத்தால் நடுநடுங்கி அலறி அடித்துக்கொண்டு அரண்மனையை நோக்கி ஓடினார்கள். அப்போது நடுநிசி நேரமாதலால் மன்னர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார். இருப்பினும், மன்னரை எழுப்பி நடந்தவற்றை நடுக்கத்தோடு ராஜகுரு கூறினார். இதைக்கேட்ட மன்னர் இதற்குப் பரிகாரம் காண ஆழ்ந்த யோசனை செய்தார். பின் ஒரு முடிவுக்கு வந்தார். 'தெனாலிராமன் ஆவியாகிய பிரம்மராட்சசனை ஒழித்துக்கட்டி நாட்டிற்கு நன்மை உண்டாகச் செய்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசளிப்போம்' என்று பறைசாற்றி அறிவிக்கச் செய்தார்.


எனினும், நாட்டு மக்கள் எவரும் பிரம்மராட்சசனை ஒழித்துக்கட்ட முன்வரவில்லை. சில நாட்களுக்குப் பின் ஒரு துறவி மன்னரைக் காண வந்தார். மன்னரும் அந்தத் துறவியிடம் தெனாலிராமனின் ஆவியாகிய பிரம்மராட்சசனை ஒழித்துக் கட்டும்படி வேண்டினார். இதைக்கேட்ட துறவியர், "மன்னர் பெருமானே,கவலையை விடுங்கள். பிரம்மராட்சசனை என்னால் முடிந்தளவு ஒழித்துக் கட்ட முயற்சிக்கிறேன். மீண்டும் தெனாலிராமன் உயிர் பெற்று வந்தால்தான் பிரம்மராட்சசனுடைய அட்டகாசம் சுத்தமாக குறையும்" என்றார்.

"அப்படியானால், தங்களால் மீண்டும் தெனாலிராமனை உயிர்ப்பிக்க முடியுமா?" என வினவினார் மன்னர்.

"ஓ... தாராளமாக என்னால் முடியும்" என்றார் துறவி. மன்னர் மகிழ்ந்து "தாங்கள் தெனாலிராமனை உயிர்ப்பித்துக் காட்டுங்கள். அதுவே எனக்குப் போதும்" என்றார். உடனே துறவியார் தான் அணிந்திருந்த வேடத்தைக் கலைத்தார். நானே தெனாலிராமன். எதிரிகளின் தாக்குதலில் இருந்து தப்பிய நான் சிகிச்சைக்காக வெளியூர் சென்றிருந்தேன். அதனால் நான் இறந்துவிட்டதாக நினைத்துவிட்டீர்கள். இப்பொழுது அனைத்தையும் கேள்விப்பட்டே துறவி வேடத்தில் இங்கு வந்தேன்" என்றார். இதையறிந்த மன்னர் மகிழ்ந்து தெனாலிராமனைக் கட்டித் தழுவிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA





# கல்விச் சேவைகள் அமைச்சு

## தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

## தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர் - 2014

# கட்டுரைப் போட்டி

விஜய்

ஒக்டோபர் மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன் இணைந்ததாக, தேசிய நூலக நண்பர்கள் அமைப்பும் மார்ட்டின் விக்ரமசிங்ஹ நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் இணைந்து நடாத்தும் கட்டுரைப் போட்டிக்காக, பாடசாலை மாணவர்களிடம் இருந்து கட்டுரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரு வேறுபட்ட வயது மட்டங்களின்கீழ் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இப்போட்டி நடாத்தப்படும்.

### கட்டுரைத் தலைப்பு

(தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு)

i. வயது மட்டம்:
12-15 வருடங்கள் (அதிகூடியது750 சொற்கள்) நந்தி (பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்) அவர்கள் எழுதிய நூல்களில் ஒன்றைத் தெரிவுசெய்து, அதை ஓர் உயர்மட்டக் கலைப்படைப் பாகக் கருதுவதற்கான காரணத்தை விளக்கவும்.

ii. வயது மட்டம்:
16-18 வருடங்கள் (அதிகூடியது 1000 சொற்கள்) பண்டிதமணி எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள், தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஆற்றிய சேவை பற்றி விபரிக்கவும்.

### போட்டிக்கான விபரங்களும் நிபந்தனைகளும்

1. மாணவர் ஒருவர் ஒரு கட்டுரையை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
2. சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் பாடசாலை அதிபரின் விதந்துரையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. சுயாதீனமான நடுவர் குழு ஒன்றினால் கட்டுரைகள் தெரிவுசெய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.
4. சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் 2014 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக, கீழே வழங்கப் பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை வெட்டிப் பூர்த்தி செய்து, கட்டுரையுடன் இணைத்து, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**முகவரி:**
தேசிய நூலக நண்பர்கள்,
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை,
14, சுதந்திர மாவத்தை, கொழும்பு-07.

### பரிசு விபரங்கள்

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழுடன், இலங்கை தேசிய நூலகத்தின் அங்கத்துவத்தையும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றிபெறும் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை நூலகங்களுக்கு பெறுமதிவாய்ந்த புத்தகத் தொகுதி ஒன்றும் வழங்கப்படும். நான்காம் இடத்தில் இருந்து பத்தாம் இடம் வரை வெற்றிபெறும் மாணவர்களுக்கு ஆறுதல் பரிசாக பெறுமதிவாய்ந்த சான்றிதழும் ஞாபகச் சின்னமும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெற, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன் தொடர்புகொள்ளலாம். மேலதிக தகவல்களை வாசகர் சேவைப் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையிடம் பெற முடியும். தொலைபேசி இலக்கம்: 011-2685197/ 011-2674386

**பரிசு விபரங்கள்:** * முதலாம் இடம் ரூ. 5,000 * இரண்டாம் இடம் ரூ. 3,000 * மூன்றாம் இடம் ரூ. 2,000

### விண்ணப்பப் படிவம்

தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர் - 2014
கட்டுரைப் போட்டி

வயது மட்டம்: வயது
12-15 ☐ 16-18 ☐

மாணவன்/மாணவியின் பெயர்:
..................................................

நிரந்தர முகவரி: ..................................
..................................................
..................................................

பிறந்த நாள்: ......................................

தொலைபேசி இலக்கம்: .................
ஈ-மெயில் (இருந்தால்)
..................................................

பாடசாலையின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:
..................................................

அதிபரின் பெயர்:
..........................

அதிபரின் ஒப்பம், திகதி:
..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாசத்தடை மற்றும்

### சுவாச வேகம் -Respiratory Rate



- வளர்ந்தோர் - 16-18 (நிமிடத்திற்கு)
- சிறுவர்/ குழந்தைகள் - 20-30 (நிமிடத்திற்கு)

பல கல உயிரினங்களில், மூச்சுத் தொகுதி அல்லது மூச்சியக்கத் தொகுதி அல்லது சுவ
(Respiratory System) உடற் செயற்பாடுகளுக்குத் தேவையான வளிமங்களை உள்ளிழுத்து
செய்யக்கூடிய ஓர் உடற்கூற்றியல் தொகுதியாகும். மனிதர்களிலும், பிற பாலூட்டிகளிலும்,
உடற்கூற்று அம்சங்களாக மூச்சுக் குழாய்கள், நுரையீரல், மூச்சியக்கத் தசைநார்கள் என்பன
ஒட்சிசன் மூலக்கூறுகளும், காபனீரொட்சைட் போன்ற மூலக்கூறுகளின் பரவல் மூலம், வெ
இடையே மாற்றீடு செய்துகொள்ளப்படுகின்றன. இம் மாற்றீடு நுரையீரலின் நுண்குழாய்ப் ப
இவ்வாறான செயற்பாடுகளில் சுவாச வேகம், சுவாசத்தடை, மூச்சுத் திணறல் என்பனவும் க
விடயங்களாகும். சுவாசத்தடை முறைகள் மற்றும் அவற்றிற்கான முதலுதவிகள் பற்றியும் இ

### சுவாசத்தைப் பரிசோதித்தல்



- மார்பும், வயிறும் உயர்ந்து பதிகின்றதா என அவதானித்தல்
- மூக்கிற்கு அருகில் காதை வைத்துப் பரிசோதித்தல்
- மூக்கிற்கு அருகில் விரலை வைத்துப் பரிசோதித்தல்

### மூச்சுத் திணறல்

சுவாசப் பாதையில் தடை ஏற்படல் அல்லது வேறு காரணங்களினால் உடற்கலங்களுக்குத் தேவையான அளவு ஒட்சிசன் ($O_2$) கிடைக்காதபோது ஏற்படும் நிலை இதுவாகும்.



### சுவாசத்தடை ஏற்படக் காரணம்



- நச்சுவாயு அல்லது புகை சுவாசிக்கப்படல்
- மூக்கு, வாய் முற்றாக அடைபடல்
- நாக்கு தொண்டையில் அடைபடுதல்
- கழுத்து இறுக்கப்படுதல்
- சுவாசப்பாதையில் பிற பொருட்கள் அடைபடுதல்
- நீர், குருதி, வாந்தி போன்றன சுவாசப்பைகளில் சேர்தல்
- மார்பு, வயிறு அமுக்கப்படுதல்
- மூளை, முண்ணான் பாதிக்கப்படுதல்

### சுவாசத்தடைக்கான அறிகுறிகள்

- சுவாச வேகம் கூடிக் குறைதல்
- நாக்கு, உதடு, நகம் என்பன நீல நிறமடைதல்
- கண்மணி விரிவடைதல்
- சுயநினைவு படிப்படியாகக் குறைதல்




### சுவாசத்தடைக்கான பொது முதலுதவி



- தங்கு தடையற்ற சுவாசப்பாதையை அமைத்தல்
- சுவாசம், நாடி என்பவற்றைப் பரிசோதித்தல்
- இதயத்துடிப்பு நடைபெறுமாயின், செயற்கைச் சுவாசம் மாத்திரம் தொடர்ந்து பெற்றுக் கொடுத்தல்
- நோயாளரில் ஏதாவது மாற்றங்கள் தென்படின், பரிசோதித்தல்
- நிலைமை சீரடைந்ததும் ஒய்வு நிலைக்குத் திரும்பல்
- A, B, C பரிசோதித்துக்கொண்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்

A - An Open Airway - தங்கு தடையற்ற சுவாசப்பாதை
B - Adequate Breathing - சீரான சுவாசம்
C - Sufficient Circulation - சீரான குருதிச்சுற்றோட்டம்

## சுவாசத்தொகுதி




### செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டிய வேகம்

- வளர்ந்தோர் - நிமிடத்திற்கு குறைந்தது 10 தடவைகள்.
- சிறுவர்/குழந்தைகள் - நிமிடத்திற்கு குறைந்தது 20 தடவைகள்.



### பயன்படுத்தக்கூடிய செயற்கை சுவாச முறைகள்

- வாயோடு வாய் வைத்து ஊதும் முறை
- மூக்கோடு வாய் வைத்து ஊதும் முறை
- மூக்கு, வாயோடு வாய் வைத்து ஊதும் முறை



### வைத்தியசாலையில் பயன்படுத்தும் முறை

- AMBU உறையைப் பயன்படுத்துதல்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


PUBLIC LIBRARY

# முதலுதவிகள்

ாசத் தொகுதியானது,
, வெளிவிடும் பணியைச்
மூச்சுத்தொகுதிகளினதும்
செயற்படுகின்றன.
ளிச்சூழலுக்கும் குருதிக்கும்
பகுதியில் நடைபெறுகின்றது.
கவனிக்கத்தக்க
ங்கு பார்ப்போம்.





## இதயம் -HEART




இதயம் என்பது குருதிச்சுற்றோட்டத் தொகுதி கொண்டுள்ள அனைத்து உயிரினங்களிலும் காணப்படக்கூடிய தசையால் ஆன ஓர் உறுப்பாகும். இதன் தொழிற்பாடானது, தொடர்ச்சியாக சீரான முறையில் சுருங்கி விரிதலின் மூலம் உடல் முழுவதும் குருதியைக் குருதிக்குழாய்களின் வழியாகச் செலுத்துவதாகும். இதயத்தின் பகுதிகளுக்குக் குருதியோட்டம் தடைப்படும்போது இதயத்திசு இறப்பு அல்லது இதயத்தசை இறப்பு (Myocardial infarction) ஏற்படுகிறது. இது பெரும்பாலும் முடியுருத் தமனியில் தடையோ, குறுக்கமோ ஏற்படுவதால் உண்டாகிறது. இதயத்தைக் கட்டுப்படுத்த தன்னியக்க நரம்பு மண்டலம் அல்லது பரிவு நரம்பு மண்டலம் என்றவொரு நரம்பு மண்டலம் உள்ளது. இந்த நரம்பு மண்டலம் தவிர, உயிரி-ரசாயன சுரப்பு நீர்களும் இதயத்தின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துகின்றன.

### இதயத் துடிப்பு

* வளர்ந்தோர் - நிமிடத்திற்கு 60-80 தடவைகள்
* சிறுவர் - நிமிடத்திற்கு 80-100 தடவைகள்
* குழந்தைகள் - நிமிடத்திற்கு 100-120 தடவைகள்





### பரிசோதித்தல்

* நாடித்துடிப்பை பரிசோதித்தல்
* மார்பின்மீது காதை வைத்துக் கேட்டல்
* மார்பின்மீது கையை வைத்துப் பரிசோதித்தல்


### இதயம் தடைப்படும் வழிகள்

* சுவாசம் தடைப்பட்டு 5 நிமிடத்தின் பின்
* மாரடைப்பு
* இதயம் நேரடியாகத் தாக்கப்படுதல்
* மின்சாரத் தாக்கம்
* விஷம் உடலுக்குள் செல்லுதல்
* சாதாரண ஒருவருக்கு வெளிமார்பமுக்கம் கொடுத்தல்



### நாடித்துடிப்பை பரிசோதிக்கக்கூடிய இடங்கள்

* கழுத்து
* மணிக்கட்டுக்கருகில்
* முழங்கைக்கு மேல்
* தொடைக்கு மேல்
* கால் பெருவிரலுக்கருகில்






### சுவாசத்தடைகளை நீக்கக்கூடிய முறைகள் (First Aid Measures for Choking)

* குழந்தை - முதுகில் அடித்தல், மார்பில் அமுக்குதல்
* சிறுவர் - முதுகில் அடித்தல், மார்பில் அமுக்குதல்
* சுயநினைவற்றபோது வயிற்றை அமுக்குதல்



எச்.துர்ஷிக்கா,
நுவரெலியா





## பல்திறன் கொள்கை

பல்திறன் என்பது 'ஹோவர்ட் கார்ட்னர்' என்பவரது மக்களின் பல்வேறு தனித்திறன்களைப் பற்றிய மனோதத்துவக் கொள்கையின் ஒரு பகுதியாகும்.ஒவ்வொரு மனிதனிடமும் ஏழு வகையான தனித்திறன்கள் உள்ளன. சிலர் ஒன்று அல்லது இரண்டு தனித் திறன்களில் சிறந்து விளங்குவர். மேலும், சிலர் அனைத்துத் திறன்களையும் சமவிகிதத்தில் பெற்றிருப்பர். ஹோவர்ட் கார்ட்னர் அந்த ஏழு தனித் திறன்களையும் பட்டியலிட்டுள்ளார். இது ஒரு தற்காலிகமான பட்டியல்தான். முதல் இரண்டு திறன்கள் பாடசாலைகளில் கண்டறியப்படுகின்றன. அடுத்த மூன்று திறன்கள் கலைகளுடன் தொடர்புடையன; இறுதி இரண்டு திறன்களை தனிமனிதத் திறன்கள் என்று ஹோவர்ட் குறிப்பிடுகிறார்.

### பல்திறன்களின் வகைகள் யாவை?

* கட்சி/இடம் சார்ந்த திறன்
* சொல்/வாய்மொழித் திறன்
* கணித/தர்க்கவியல் சார்ந்த திறன்
* உடல் சார்ந்த/ உடலசைவுத் திறன்
* இசை/சந்தம் சார்ந்த திறன்
* பிறருடன் இணைந்து செயற்படும் திறன்
* சுயதிறமையை உணரக்கூடிய திறன்




இவை தவிர, மேலும் பல திறன்களும் உள்ளன. பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கற்றல் செயற்பாடுகள் மூலம் அவற்றை உரிய வகையில் வெளிக்கொணரலாம் என்று ஹோவர்ட் கார்ட்னர் கூறுகின்றார்.

## இருளிலும் ஒளிரும் விலங்குகளின் கண்கள்...

விலங்குகளின் கண்களின் பின்புற உட்பகுதிகளில் 'டேப்டம் லுசிடம்' எனப்படும் விழித்திரை ஒளிரும் செல் படலம் உள்ளது. ஒளியானது, கண்களில் 'ரெட்டினா' எனப்படும் விழித்திரையின் மீது பட்டு கண்களின் உட்சென்று 'டேப்டம் லுசிடம்' படலத்தின்மேல் விழும்போது ஒளியாகப் பிரதிபலிக்கின்றது. இந்த ஒளிரும் படலமே இரவில் குறைந்த ஒளியில் விலங்குகளின் கண்பார்வை தெளிவாகத் தெரியக் காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: .......................................................

01) பின்வரும் பாடலை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வெள்ளைக் கொக்கு ஒன்று வந்து
மீனைக் கொத்திப் பார்த்தது
துள்ளித் துள்ளி மீனும் ஓடித்
தூரப் பாய்ந்து போனது

எல்லையற்ற கோபத்தோடு
இன்னும் கொக்கு முயன்றது
கல்லில் துள்ளி விழுந்த மீனைக்
கௌவிக் கொண்டு சென்றது

1. இப்பாடலிலுள்ள பெயர்ச்சொற்கள் இரண்டு தருக.
   ..........................................................................................
2. பெயர் அடைமொழி ஒன்று தருக.
   ..........................................................................................
3. இப்பாடலில் வினை எச்சங்கள் இரண்டு தருக.
   ..........................................................................................
4. பாடலில் காணப்படும் அடுக்குமொழிச் சொல் ஒன்று தருக.
   ..........................................................................................
5. கொக்கு ஏன் கோபம் கொண்டது?
   ..........................................................................................
6. இப்பாடலுக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.
   ..........................................................................................
7. கல்லின் மீது எது விழுந்தது?
   ..........................................................................................

02) ஒத்த கருத்துச் சொல் தருக.

1. கோபம் - ..............................................................
2. தூரம் - ..............................................................
3. ஆரம்பம் - ..............................................................
4. போனது - ..............................................................

03) அடைப்புக்குள் உள்ள சரியான சொல்லைத் தெரிவுசெய்து, இரு வாக்கியங்களையும் இணைத்து தனி வாக்கியங்களாக எழுதுக.

1. அம்மா கறி சமைத்தாள். அம்மா கிணற்றடிக்குப் போனாள். (விட்டு, முடித்து)
   ..........................................................................................
2. குமார் சுற்றும்முற்றும் பார்த்தான். குமார் அறைக்குச் சென்றான். (எழுந்து, விட்டு)
   ..........................................................................................
3. விவசாயி காலையில் எழுந்தான். விவசாயி முகம் கை-கால்களைக் கழுவினான். (விட்டு, எழுந்து)
   ..........................................................................................
4. பாடகி மேடைக்கு ஏறினாள். பாடகி பாடலைப் பாடினாள். (ஏறி, முடித்து)
   ..........................................................................................

04) பின்வரும் இணை மொழிகளை நிறைவு செய்க.

1. திருமண வீட்டிலிருந்து வந்த எனது அம்மா ஆடை ................................ கழற்றி கவனமாக வைத்தாள்.
2. நண்பர்கள் இருவரும் நகமும் ................................ யும் போல வாழ்ந்தனர்.




3. நான் எனது தங்கையை சுற்றும் ................................ தேடினேன்.
4. நான் பல மேடு ................................ கடந்து எனது நண்பனின் வீட்டை அடைந்தேன்.

05) தரப்பட்ட எழுத்துக்களில் சரியான எழுத்தை தெரிவுசெய்து, இடைவெளியை நிரப்புக.

(றி/ ரி/ லை/ ளை)

1. எனது அம்மா க............ சமைத்தாள்.
2. காட்டில் க............ அலைந்து திரிந்தது.
3. நான் கா............ கடன்களை முடித்தேன்.
4. நான் இடைவே............யில் சிநேகிதர்களுடன் விளையாடுவேன்.

06) பின்வரும் மரபுத் தொடர்களுக்கு அதன் கருத்தை எழுதுக.

1. கண்ணாயிருத்தல் - ..............................................................
2. புண்படுத்தல் - ..............................................................
3. விட்டுக் கொடுத்தல்- ..............................................................
4. பூசி மெழுகுதல் - ..............................................................
5. ஆறப்போடல் - ..............................................................

07) சரியான விடை தருக.

1. மயில் அகவும் போல் பல்லி - ................................
2. கோழி கொக்கரிக்கும் போல் நரி - ................................
3. அணில் குஞ்சு போல் கீரி - ................................
4. பாம்பு குட்டி போல் தவளை - ................................
5. ஆண் யானை களிறு போல் பெண் யானை - ................................

08) சொற்றொடர்களைச் சேர்த்து எழுதுக.

1. நெல் + வயல் = ..............................................
2. தமிழ் + சொல் = ..............................................
3. பல் + பொடி = ..............................................
4. காவி + உடை = ..............................................
5. அரிசி + சோறு = ..............................................

09) பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக.

1. வடகிழக்கு = ............................ + ............................
2. இருநூறு = ............................ + ............................
3. பனையோலை = ............................ + ............................
4. புற்றரை = ............................ + ............................
5. நீலவானம் = ............................ + ............................

10) 'எனக்குப் பிடித்த ஆசிரியர்' என்ற தலைப்பில் ஆசிரியரின் குணாதிசயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஐந்து வாக்கியங்கள் அமைக்க.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................
5. ..........................................................................................

கடந்தவார விடைகள்... 20 ஆம் பக்கத்தில்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# விளம்பரங்களுக்கு எழுதப்படும் 'ரைட் அப்' கலாசாரம்...!



ஊடக பாடநெறி பாகம்-II
பாடம் 17

## நவீன மார்க்கெட்டிங் உத்தி

இன்றைய வர்த்தக போட்டிக்களத்தில் எல்லாமே போட்டி மயமாகி விட்டதனால் ஊடகங்களும் கூட வர்த்தக மயமாகிவிட்டதைக் காணலாம். போட்டியாளர்களை வெற்றி கொண்டு வர்த்தக களத்தில் தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்கு 'மார்க்கெட்டிங்' என்ற உபாயத்தை ஊடகங்கள் பயன்படுத்தி வருகின்றன. இதனால், ஊடகங்கள் கையாள வேண்டிய தார்ப்பரியங்கள், மரபுகள், வழிமுறைகள், விதிமுறைகள் ஆகியவற்றில் இன்று பலவித மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையைக் காணலாம். உண்மையில் கால ஓட்டத்தில் நாகரிகம், தொழில்நுட்பம் என மாற்றங்கள் நிகழ்ந்தாலும் ஊடகத்துறை மரபுகளில் மாற்றங்களை ஏற்படுத்தாதிருப்பதே உண்மையான ஊடக தர்மமாகும்.ஆனால், வர்த்தக போட்டிக்களத்தில் இதற்கு மாறாகவே சில விடயங்கள் நிகழ்கின்றன.

உதாரணத்திற்கு, பத்திரிகைகள் தமது நிதி வளத்தைப் பெருக்குவதற்கு விளம்பரங்களில் கிடைக்கும் வருமானங்களையே நம்பியுள்ளன. இதனால், பத்திரிகைகள் தற்போது கையாளும் உத்திதான் ரைட் அப் (Write Up) எனும் வழிமுறையாகும். அதாவது, குறித்த நிறுவனமொன்றின் உற்பத்திப் பொருள் பற்றிய விளம்பரமொன்றை தமது பத்திரிகையில் பிரசுரிக்கும் அதேவேளை, அதே உற்பத்திப் பொருள் பற்றியும், அதன் நிறுவனம் பற்றியும் விளம்பரத்திற்கு அப்பாற்பட்ட விபரத் தொகுப்பொன்று இடம்பெறுவதை பத்திரிகையில் கண்டிருப்பீர்கள். இதுதான் 'ரைட் அப்' எனப்படுகின்றது.



Insanely addictive...one chunk is never enough

THE chocolate snobs would have you believe that Dairy Milk is cheap, bland and artificial, lacking depth and complexity. Waxy chocolate for the masses, they sneer, while nibbling on some ghastly lavender-infused, organic creation.

Utter tosh, I say, as this is the greatest chocolate in the world, sweet, rich and insanely addictive. This is the taste of my youth that never ages, chocolate as it's meant to be, the standard against which all other bars are judged. The first bite brings an involuntary smile to the face, while the tongue revels in all that milky glory.

It sweeps majestically across the taste buds, before slipping elegantly down the throat. And one chunk is never enough. The fresh milk used in Dairy Milk gives the chocolate a fundamental creaminess. Dairy Milk is the classic bar, long may it reign.




அநேகமான பத்திரிகைகளில் இவ்வாறு விளம்பர 'ரைட் அப்' இடம்பெறுவது வழமையாகி விட்டது. இதில் விளம்பரத்திற்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படும். அதற்கு ஓர் ஊக்குவிப்பு திட்டமாகவே இலவசமாக இந்த 'ரைட் அப்' பிரசுரமாகின்றது. இது உண்மையில் நியாயமா? இல்லையா? என்பது விவாதத்திற்குரியதுதான். ஊடக தார்ப்பரியத்தின்படி இவ்வாறு விளம்பரத்திற்கு மேலதிகமாக 'ரைட் அப்' எழுதுவதானது, ஊடக மரபிற்கு அப்பாற்பட்டதென்றே கருதவேண்டும். ஏனென்றால், குறித்த ஒரு வர்த்தக விளம்பரமொன்றை பத்திரிகையில் பிரசுரிக்கும் அதேவேளை, அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படும் விபரங்களின் நம்பகத்தன்மைக்கு குறித்த பத்திரிகை நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பாகாது. அது வெறும் விளம்பரமாகவே கருதப்பட வேண்டும். அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பு வாசகர்களை, நுகர்வோரை பொறுத்ததாகும். எனவே, விளம்பரத்திலுள்ள விபரங்கள் தொடர்பாக பாவனையாளர்கள் ஏமாற்றத்திற்குள்ளானாலோ, அதிருப்திக்குள்ளாகினாலோ அந்த அதிருப்தியை பத்திரிகை நிறுவனத்தின்மீது காட்ட முடியாது. ஆனால், தற்போதைய புதிய நவீன கால மாற்றங்களுடன் 'ரைட் அப்' என்ற புதிய 'உத்தி' கையாளப்படுவதானது, தெரிந்தோ, தெரியாமலோ குறித்த விளம்பரத்திற்கு தாமும் பொறுப்பாளிகள் ஆவதை மறுக்க முடியாது.




அதாவது, 'ரைட் அப்' எழுதும் போது விளம்பரத்திற்கு சமாந்தரமாக அதிலுள்ள உற்பத்திப் பொருளை வாங்குவதற்கு வாசகர்களை தூண்டும் முகமாக விளக்கங்கள் தரவுகள் பல செய்திப் பிரிவில், கட்டுரை வடிவில் எழுதப்பட்டிருக்கும். ஆக! ஒரு வகையில் இதுவொரு 'சிபாரிசு' கட்டுரையாகவே அமைகின்றது. அப்படியாயின், இதற்கு குறித்த பத்திரிகை பொறுப்பேற்பதனைப் போன்றவோர் தொனியே அங்கு மறைமுகமாக காணப்படும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் வாசகர்கள் அல்லது பயனாளர்கள் ஏமாற்றத்திற்கோ பாதிப்பிற்கோ, உள்ளாகும்போது குறித்த 'ரைட் அப்' விபரக் குறிப்பை வழங்கிய பத்திரிகையும் இதற்குப் பொறுப்பு என்று கூறினால், அதுகுறித்த பத்திரிகை நிறுவனத்திற்கு இக்கட்டான சூழ்நிலையையே ஏற்படுத்தும். இருந்தபோதிலும், இன்றைய 'மார்க்கெட்டிங்' சூழலில் இவை கண்டுகொள்ளப்படுவதில்லை. ஆனால் இதனை ஊடக தார்ப்பரியத்தின் ஓர் அங்கமாக கருதலாகாது.

(தொடரும்)

**ரிஷபன்**

---

## வெல்லுங்கள்! விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*27.08.2014* TOP News கேள்விக்கான விடை:
நிகோலா டெஸ்லா

Pen Drive வெற்றியாளர்:
வி.பிரபு,
34, ஸ்ரீ சங்கபோ வீதி,
கெளடான, தெஹிவளை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(10.09.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

**இவ்வார கூப்பன்:**
10.09.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பையும் ஏனைய நகரங்களையும் இணைத்த பெருந்தெருக்கள்

கடுகண்ணாவ வழியாகப் பாதையொன்றை அமைத்து கொழும்பையும் கண்டியையும் இணைக்க வேண்டுமென ஆள்பதி பிரவுன்றிக் எண்ணினார். அந்தப் பணியை ஆரம்பிக்கும் பொருட்டு உடல் உழைப்பிற்காக காணிகளைப் பெற்றவர்களைப் பயன்படுத்த அவர் தீர்மானித்தார். 1818 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின்படி, அவர்களை இராஜகாரியத்தில் இருந்து விடுதலை செய்தார்.

கரையோரப் பிரதேசங்களில்கூட 1818 ஆம் ஆண்டு இராஜகாரிய முறை தொடர்பான சட்டம் அமுலில் இருந்தது. மலைநாடு மற்றும் கரையோரப் பிரதேசம் என இரண்டையும் இணைத்து எந்த ஒரு மன்னரும் செயற்படாத விதத்தில் உழைப்பாளர்களுக்கு சம்பளம் வழங்காமல் வேலைவாங்கும் முறையை ஆள்பதி எட்வட் பாண்ஸ் கடைப்பிடித்தார். இந்த ஆள்பதி இரு வருடங்களுக்குள் கொழும்பையும் கண்டியையும் இரு பாதைகளின்மூலம் இணைத்தார். அக்காலத்தில் காட்டுக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆங்கிலப் படையினர் பெருந்தொகையாக நிறுத்தப்பட்டிருந்தனர். அதனால், அதிக செலவுகளும் பெருந்தொல்லைகளும் ஏற்பட்டன. அதனைக் குறைப்பதே பாதைகள் அமைப்பதன் பிரதான நோக்கமாக இருந்தது. எனினும், இப்பாதை அமைத்ததன் மூலம் மற்றொரு நன்மை கிடைத்தது. அதாவது, பாதை அமைத்து போக்குவரத்து இலகுவாக்கப்பட்டதன்மூலம் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளமூட்டப்பட்டு அபிவிருத்தி அடையவும் அதன்மூலம் கிடைத்த வருமானத்தை மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு செலவிடவும் வாய்ப்புகள் கிடைத்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



தொற்றுநோய்கள் என்பது, மனிதர்களுக்கு புதிய விடயம் அல்ல. தொழுநோய், வயிற்றோட்டம், காசநோய், ப்ளேக் எனத் தொடங்கி சிக்குன்குன்யா, சார்ஸ், இன்ஃப்ளுவென்ஸா A-$H_1N_1$ போன்ற தொற்று நோய்கள் ஒவ்வொரு காலத்திலும் உலக மக்களிடையே பரவி, அவ்வப்போது பெரும் பீதியை ஏற்படுத்தின. இவை போன்றதொரு வைரஸ் தொற்று தற்போதளவில் உலகில் மிக வேகமாகப் பரவி வருகின்றது. அதுதான் மேற்கு ஆபிரிக்காவில் ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பதற்குக் காரணமாக இருக்கின்ற 'எபோலா' (Ebola) வைரஸ் காய்ச்சலாகும். இந்த வைரஸ் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவலாம் என்ற அச்சத்தை தற்போது ஏற்படுத்தியுள்ளது. இதனால், ஒவ்வொரு நாடும் இந்த நோய் குறித்து பல்வேறு முற்காப்பு நடவடிக்கைகளை மிகத் தீவிரமாகவே எடுத்து வருகின்றது.


எபோலா தொடர்பான பரிசோதனையொன்றின்போது..


எபோலா வைரஸ்



# தீவிரமாகப் பரவிவரும் எபோலா வைரஸ் காய்ச்சல்

## தடுப்பு மருந்துகள் இல்லாத அவலம்...

### எபோலாவின் தோற்றமும் பரவலும்

1976 இல் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ நாட்டின் 'எபோலா' என்ற நதிக்கரையில் இந்த நோய் தோற்றம் பெற்றதால், அந்த வைரஸிற்கு 'எபோலா' என்று பெயரிடப்பட்டது. இதனை அடுத்து, மேற்கு ஆபிரிக்காவின் ஏனைய நாடுகளில் இதன் தாக்கம் வேகமாகப் பரவி வருவது அவதானிக்கப்பட்டது. 1995 இல் கொங்கோவில் இத்தொற்று தீவிரமாகப் பரவியது. 2007 இல் கொங்கோவின் கம்புங்கு பிரதேசத்திலும் உகண்டாவிலும் இந்த நோய்த் தொற்றுக் குறித்து அறியப்பட்டது. 2009 மற்றும் 2012 இல் இந்த நோய் குறித்த தகவல்கள் வெளியாகின. 2012 வரை இந்த நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் குறைவாகவே இருந்தது.

கடந்த ஆண்டின் (2013) இறுதிப் பகுதியில் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கினியாவின் குயிக்கேடோய் என்ற நகரத்தில் இந்த வைரஸ் மீண்டும் தலைதூக்கியது. இந்த நகரில் வசித்த 2 வயதுடைய ஆண் குழந்தை ஒன்றுக்கு கடுமையான காய்ச்சல், வாந்தி, வயிற்றுப்போக்கு ஆகியவை ஏற்பட்டதோடு, நோய் பாதிப்பு அதிகமாகி அந்த குழந்தை இறந்தது. ஒரு வாரத்துக்குப் பின், அந்த குழந்தையின் தாயும், அதனை அடுத்து அக்குழந்தையின் பாட்டியும் இதே பாதிப்புகளுக்குள்ளாகி இறந்தனர். இவ்வாறு அந்த நகரில் இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளாகிப் பலரும் உயிரிழந்தனர். அப்போது, எபோலா வைரஸ் தாக்கத்திற்குட்பட்டுத்தான் இந்த இறப்புக்கள் நிகழ்கின்றன என்று அப்பகுதி மக்கள் எவரும் அறிந்திருக்கவில்லை.





இவ்வாறு படிப்படியாகப் பரவிய இந்நோயின் பாதிப்பு, ஒட்டு மொத்தக் கினியாவிலும் கடும் பாதிப்பை ஏற்படுத்திய பின்னர்தான், அது எபோலா வைரஸ்ஸின் தாக்கம் என்பதை சுகாதார அதிகாரிகள் உணர்ந்தனர். அதற்குள் கினியாவின் அருகில் உள்ள ஏனைய மேற்கு ஆபிரிக்க நாடுகளில் வசித்த ஆயிரக்கணக்கானோர் இந்த நோய் தொற்றுக்கு ஆளாகிவிட்டதோடு, இந்த நோயினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையும் தற்போது ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. இந்த எபோலா வைரஸ் தொற்றுக்குள்ளானோரில் 90 சதவீதமானோர் மரணத்தை தழுவுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

### நோய் எவ்வாறு பரவுகின்றது?

'எபோலா வைரஸ் நோய்' (Ebola Virus Disease) அல்லது 'எபோலா இரத்தப்போக்கு காய்ச்சல்' (Ebola hemorrhagic fever) என அறியப்படும் இந்த நோயை உண்டாக்கும் எபோலா வைரஸ் எவ்வாறு பரவுகின்றது என்பது இதுவரை சரிவரக் கண்டறியப்படவில்லை. பழ வௌவால்களே (Fruit Bats) இந்த வைரஸ்ஸிற்கான மூலாதாரமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அவற்றின் உமிழ்நீரிலுள்ள (எச்சிலிலுள்ள) இந்த வைரஸ், அவை உட்கொள்ளும் பழங்களின்மூலம் மனிதர்களுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் பரவுவதாகக் கருதப்படுகின்றது.




இவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் மனிதர்கள், குரங்குகள், கொரில்லாக்கள், சிம்பஞ்சிகள், முள்ளம் பன்றிகள், என்டிலோப்கள் போன்றவற்றின் இரத்தம், மலம், சளி, வியர்வை, சிறுநீர், உமிழ்நீர், உயிரணு ஆகியவற்றின்மூலம் இந்த நோய் ஏனைய மனிதர்கள் மற்றும் விலங்குகளிடையே பரவுகின்றது என்று கூறப்படுகின்றது. மேலும், இந்த நோய்த் தாக்கத்தினால் இறந்தவரின் உடலை தொடுவதன்மூலமும் பாதிப்புக்குள்ளான [illegible] மற்றும் தொடுதல் என்பனவற்றின்மூலமும் இந்நோய் பரவக்கூடும். தவிர, பாதிப்புக்குள்ளான ஒருவருடனான தொடுகை செயற்பாடுகள் மூலமும் இந்த வைரஸ் ஒருவருக்கொருவர் தொற்றலாம்.


### நோய் அறிகுறிகள்

நோய் அறிகுறிகள் வெளித்தெரிய 2 முதல் 21 நாட்கள் வரைகூட ஆகலாம். நோயின் அறிகுறியாக முதலில் காய்ச்சல் ஏற்படும். பின்னர் தலைவலி, கடும் காய்ச்சல், மூட்டு வலி, களைப்பு, தொண்டை வலி என்பன ஏற்படும். நோய் தீவிரமடையும்போது; வாந்தி, குமட்டல், வயிற்றோட்டம், உணவில் வெறுப்பு, மலத்துடன் இரத்தப் போக்கு, முரசிலிருந்து இரத்தம் வெளியேறல், துவாரப் பகுதிகளூடாக (கண், காது, மூக்கு, வாய், மர்ம உறுப்புக்கள்) இரத்தம் வெளியேறல் போன்ற அறிகுறிகளையும் காணலாம். சில நாட்களின் பின் உடலில் கொப்புளங்களும் வெளிப்படும்.

### நோயில் இருந்து எவ்வாறு பாதுகாப்புப் பெறலாம்?

இந்த நோய்க்குரிய தடுப்பு மருந்துகள் இன்னும் பரிசோதனை மட்டத்திலேயே உள்ளன. எனினும், நோய்த் தாக்கத்தின்போது உடலில் ஏற்படும் நீரிழப்பு, இரத்த இழப்புகளை ஈடுகட்டும் விதத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்குவதன்மூலம் நோயாளி உயிர்பிழைக்கும் வாய்ப்புண்டு என சில மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இறந்த நோயாளிகளின் உடல்களை அடக்கம் செய்வதில் உரிய முறைகளைக் கையாள வேண்டும். நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பவர் கையுறைகள், ஏப்ரன், சட்டை, முகமூடிகள், பாதணிகள், கண்ணாடி என்பனவற்றை அவசியம் பயன்படுத்த வேண்டும். நோயாளியைத் தனிமைப்படுத்தி சிகிச்சைகளை வழங்க வேண்டும்.

எபோலா பரவிவரும் மேற்கு ஆபிரிக்க நாடுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிற்கு நாடு வேறுப

# உணவு முறைகள்



ஒவ்வொரு மனிதரினதும் உடல் செயற்பாடுகள் ஒரே மாதிரியானதாக இருந்தாலும், மனிதர்கள் தமது இருப்பினை தக்கவைத்துக்கொள்ளப் பின்பற்றும் உணவு முறைகள், அவர்கள் வாழும் பகுதிகளில் நிலவும் காலநிலை, கலாசாரம், மதம் போன்ற பல்வேறு காரணிகளுக்கமைய வேறுபட்டுக் காணப்படுகின்றன. அந்தவகையில், உலகின் ஒவ்வொரு வலயத்திற்கும் என்று தனித்துவமான உணவுகள், உணவு உட்கொள்ளும் முறைகள், உணவு பரிமாறல் மற்றும் உபசரிப்பு முறைகள் காணப்படுகின்றன. ஆனால், தற்போதளவில் பெரும்பாலான நாடுகளில் பல்வேறு நாடுகளின் கலாசாரங்களுக்குட்பட்ட உணவுகளும் தயாரிக்கப்படுவதோடு, மக்களும் அவற்றை உட்கொள்ளப் பழகிவிட்டனர்.

மேற்கத்தேய மக்களின் உணவுகளில் சீஸ், க்றீம், சோஸ் என்பன பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. எமது நாட்டில் பலசரக்குப் பொருட்கள், எண்ணெய், தேங்காய்ப்பால் என்பன சேர்க்கப்பட்டே பெரும்பாலும் உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த உணவுகள் மேற்கத்தேய மக்களுக்கு அதிக காரத்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றன.ஏனெனில்,



பிரித்தானிய புடிங் வகையொன்று

அவர்களின் உணவுக் கலாசாரம் எமது உணவுக் கலாசாரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

## எமது நாட்டிலும் பல வகையான உணவுப் பொருட்கள்...

குளிர் காலநிலையில் வளரும் சிலவகை பழங்கள் மற்றும் காய்கறிகளைத் தவிர, ஏனைய அனைத்துவிதமான காய்கறிகள், பழங்கள், தானிய வகைகள் மற்றும் கிழங்கு வகைகளையும் எமது நாட்டிலேயே பயிரிட்டு நுகரக்கூடிய வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம்.எனினும், தற்காலத்தில் மக்களின் தேவைகள் மற்றும் பொருளாதார வசதிகளின் நிமித்தம் பிறநாட்டு உணவுப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டு, நுகரப்படுகின்றன.

## பிரித்தானிய உணவுகள்

உணவு தயாரிப்பதற்கான சிறந்த மூலப்பொருட்களைக்



கெபாப்



தந்தூரி சிக்கன்

கொண்ட தலைசிறந்த நாடுகளாக பிரித்தானியாவும் அயர்லாந்தும் திகழ்கின்றன. பல்வேறு பிராந்திய உணவு வகைகளும் இங்கு உள்ளன. புடிங் வகைகளுக்கு பிரசித்தி பெற்ற நாடாக பிரித்தானியாவைக் குறிப்பிடலாம்.

## பிரான்ஸிய உணவுகள்

உணவு தயாரிப்பு என்பது, பிரான்ஸில் மிகவும் முக்கியமானதொரு கலையாகவே கருதப்படுகின்றது.சமையல் திறமை, உணவை மதித்தல், உணவு மீதான ஈர்ப்பு என்பனவற்றின் அடிப்படையில் பிரான்ஸிய சமையல்கலைஞர்களால் அந்நாட்டு சமையற் கலை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. உணவு தயாரிப்பில் பல்வேறு அணுகுமுறைகளையும் மூலப்பொருட்களையும் அறிமுகம் செய்த பெருமை பிரான்ஸிய சமையற்கலைஞர்களையே சாரும்.

## இத்தாலிய உணவுகள்

இத்தாலிய உணவுகளின் வரலாறு 16 ஆம் நூற்றாண்டுக்குரியதாகும். இத்தாலிய உணவுகளைப் பின்பற்றியே பிரான்ஸிய உணவுகள் தயாரிக்கப்பட்டன. பெஸ்ட்டா, ரிசோட்டோ, பிஸ்ஸா, சீஸ் ஆகிய உணவுகளுக்கு இத்தாலி பிரபல்யம் பெற்ற நாடாகும்.

## ஒஸ்ட்ரியா, சுவிற்சர்லாந்து, ரஷ்யா மற்றும் ஸ்பெய்ன் நாடுகளின் உணவுகள்

இந்த நாடுகளின் உணவுகள் பெரும்பாலும் இறைச்சி மற்றும் [illegible] அடிப்படையாகக் கொண்டவையாகும். ஒஸ்ட்ரியாவின் வியன்னா நகரம் பேஸ்ட்ரி உணவுகளுக்கு பிரசித்தி பெற்றதாகும். சுவிற்ஸர்லாந்து சீஸ் உணவுகளுக்கு பிரசித்தி பெற்ற நாடாகும். ஸ்பானிய மற்றும் போர்த்துக்கேய உணவுகளில் அதிகளவு க்றீம் மற்றும் பட்டர் என்பன பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறுபட்ட முறைகளில் தயாரிக்கப்பட்ட உணவுகளையும் இங்குள்ள மக்கள் உட்கொள்கின்றனர். மீன் சினையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் 'கேவியர்' (Caviar) என்ற உணவு ரஷ்யாவில் பிரசித்திபெற்றது.



ஆபிரிக்க உணவு வகையொன்று



அமெரிக்காவின் துரித உணவுகள்

## ஸ்கெண்டிநேவிய நாட்டு உணவுகள்

டென்மார்க், நோர்வே மற்றும் சுவீடன் போன்ற நாடுகளின் பிரதான உணவு மீன் ஆகும்.குறிப்பாக, ஹெருல்லா மீன் சார்ந்த உணவுத் தயாரிப்புகள் இங்கு பிரசித்தி பெற்றவையாகும்.

## மத்தியதரைக் கடல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் உணவுகள்

இந்த வலயங்களின் சமையல் கலையானது, மத - பூகோள- வரலாற்று ரீதியில் கட்டியெழுப்பப்பட்டதாகும். மத்தியதரைக் கடல் நாடுகளில் ஒலிவ், கத்தரிக்காய், எலுமிச்சை, கணவாய், யோகட், செம்மறியாட்டு குட்டிகளின் இறைச்சி என்பன சார்ந்த உணவுகள் பிரசித்திபெற்றவையாகும். மத்திய கிழக்கு நாடுகளில் கோதுமை, அரிசி, தானிய வகைகள், கடலை, அவரை வகைகள், கத்தரிக்காய், பேரீச்சம் பழம், நெய் என்பன பிரசித்தி பெற்ற உணவுகளாகும்.



பிரான்ஸிய உணவொன்று



இத்தாலிய உணவு வகையொன்று







மத்தியதரைக் கடல் நாடுகளின் உணவு வகைகள்



சுவிஸ் சீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA




கரீபியன் உணவு வகையொன்று

## அமெரிக்க உணவுகள்

அமெரிக்காவில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் குடியேறியுள்ளதனால், அங்கு பல்வேறுபட்ட உணவு வகைகளைக் காணலாம். அமெரிக்காவில் வாழும் மக்கள் துரித உணவுகளையே (Fast Foods) அதிகம் நாடுகின்றனர்.

## மெக்ஸிகன் உணவுகள்

அமெரிக்கா உட்பட, உலகின் பல்வேறு நாடுகளில் பரவியுள்ள மெக்ஸிகன் உணவுகளில் பிரான்ஸிய, ஸ்பானிய, அஸ்டெக் சமையல் கலை பாரம்பரியங்களும் கலந்துள்ளன. மெக்ஸிகோ மக்களின் பிரதான உணவு சோளம் சார்ந்த உணவுத் தயாரிப்புகளாகும்.





ஸ்கெண்டிநேவிய உணவு வகையொன்று

## கரீபியன் வலய உணவுகள்

இந்த வலயத்தில் அதிகளவு காரத்தன்மையுடைய உணவுகளே பரிமாறப்படுகின்றன. வெப்பவலயம் என்பதனால், இங்கு பழங்கள் மற்றும் காய்கறிகளின் விளைச்சல் அதிகமாகும். கொய்யா,மாம்பழம், பப்பாளி, அன்னாசி, தேங்காய், வெண்டி, ஈரப்பலா, வாழை மற்றும் வற்றாளைக் கிழங்கு என்பன இங்கு பிரபல்யம் பெற்ற உணவுகளாகும். இறால், நண்டு, கணவாய் போன்ற கடலுணவுகளும் இங்கு பிரசித்தி பெற்றவையாகும்.

## இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் உணவுகள்

உணவில் பலசரக்குப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள் மற்றும் இயற்கை சுவையூட்டிகளைப் பயன்படுத்துவதில் இந்தியா பிரபல்யம் பெற்ற நாடாகும். வட இந்தியாவின் பிரபல்யம் பெற்ற சுவையான உணவாக தந்தூரி சிக்கனைக் குறிப்பிடலாம். பங்களாதேஷில் கடலுணவுகள் பிரசித்திபெற்றுள்ளன. பாகிஸ்தானிய உணவுகளில் அதிகளவு நெய் பயன்படுத்தப்படுவதுடன், 'கெபாப்' என்பது அங்கு பிரசித்தி பெற்றதோர் உணவாகும்.

## சீன உணவுகள்

மிகப் பெரிய நாடான சீனாவில் நான்கு விதமான பாரம்பரிய உணவுகள் உள்ளன. கிழக்கு சீனாவில் அதிகளவு பழங்கள், காய்கறிகள் மற்றும் மீன்கள் உணவாகக் கொள்ளப்படுகின்றன. கிழக்கு சீனா சோயா சோஸ் தயாரிப்புக்கு பிரசித்திபெற்ற இடமாகக் கூறப்படுகின்றது.வட சீனாவில் கோதுமை மற்றும் சோளம் என்பன பயிரிடப்படுவதால், அவற்றில் இருந்து நூடில்ஸ், பேண்கேக் மற்றும் பெட்டிஸ் வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு இறைச்சி வகைகள் இலகுவில் கிடைக்காது. வெள்ளைப்பூண்டு, லீக்ஸ், வெங்காயம் மற்றும் விதை வகைகள் இங்கு அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே, மேற்கு சீனாவில் காரத்தன்மை உணவு தயாரிப்பு காணப்படுகின்றது. சிவப்பு மிளகாய், மிளகு, இஞ்சி, பழங்கள், காய்கறிகள், மீன், இறைச்சி என்பன உணவு தயாரிப்பின்போது பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.தென் சீனாவின் பிரதான உணவு சோறாகும். இனிப்பு மற்றும் புளிப்பு சுவையுடைய உணவுகள் இங்கு பிரபல்யமாகும்.


மேற்கு சீனாவின் உணவு வகையொன்று


வியட்நாம் உணவு வகையொன்று


சொசேஜஸ் மற்றும் இறைச்சி வகைகள்

## ஜப்பானிய உணவுகள்

உணவின் சுவையை அதிகரிக்கும் வகையிலும் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்திலும் ஜப்பானிய உணவுகள் உள்ளன. மீன், சோறு, நூடில்ஸ், காய்கறிகள், சோயா சோஸ் என்பன ஜப்பானிய மக்களின் பிரதான உணவுகளாகும். 'சுஷி' எனப்படும் உணவு வகை இங்கு பிரசித்தி பெற்றது.

## தென்கிழக்கு ஆசிய உணவுகள்

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளினதும் உணவு பாரம்பரியங்களை இந்த வலயத்தில் காணலாம். இவ்வலயத்திற்குட்பட்ட சிங்கப்பூர், இந்தோனேஷியா, மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளில் சோறு, அன்னாசி, பொமெலோ பழம், மெண்டரின், வாழை, தேங்காய், மாம்பழம், பப்பாளி ஆகியவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. சாதிக்காய், ஏலம், இஞ்சி போன்ற வாசனைத் திரவியங்களும் இங்கு பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.


ஜப்பானிய உணவு வகைகள் சில...


சிங்கப்பூர் உணவு வகைகள் சில...


மெக்ஸிகோ உணவுகள் சில...

## ஆபிரிக்க உணவுகள்

வாழை, பப்பாளி, மாம்பழம், திராட்சை என்பனவும் கரும்பும் ஆபிரிக்க நாடுகளில் நன்கு வளர்கின்றன. டியூனீசியா மற்றும் அல்ஜீரியா போன்ற நாடுகளின் தேசிய உணவாக கோதுமையில் தயாரிக்கப்படும் 'குஸ்குஸ்' எனும் உணவு வகை காணப்படுகின்றது. எத்தியோப்பியாவில் கோப்பி பயிர்ச்செய்கை பிரபல்யமாகும். தவிர; தேயிலை, சோளம் என்பனவும் பிரதானமாகப் பயிரிடப்படுகின்றன. மேற்கு ஆபிரிக்காவின் பிரதான உணவு 'கெசாவா' (மரவள்ளிக்கிழங்கு) ஆகும். உலகின் பிரதான கொக்கோ உற்பத்தி நாடு கானா ஆகும். நைஜீரியாவில் நிலக்கடலை பயிரிடப்படுகின்றது. தென்னாபிரிக்காவில் கரும்பும் சோளமும் பயிரிடப்படுகின்றன.

-பிரியா


வியன்னா பேஸ்ட்ரி


ஸ்பெயின் உணவு வகையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மனிதர்களின் திடுக்கிடும் மரபணு பகுப்பாய்வுகள்







நவீன மனித இனம் ஆபிரிக்காவில் இருந்தே உலகம் முழுவதும் பரவிச் சென்றுள்ளது. ஆபிரிக்காவுக்கு அப்பால் வேறு கண்டங்களுக்கும் பிரதேசங்களுக்கும் இவர்கள் இடம் பெயர்ந்தபோது, புதிய காலநிலையையும் சுற்றாடல் நிலைமைகளையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறே இடம்பெயர்ந்த நவீன மனித வர்க்கத்திற்கு திபெத் மேட்டுநிலத்தில் வாழக் கிடைத்தமை குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாகும். இவ்வாறு இடம்பெயர்ந்த மனிதர்கள் வேறு மனித சந்ததியினருடன் கலந்ததினால், மரபணு பன்மைத் தன்மைகளில் வேறுபாடுகளும் ஏற்பட்டன. அத்துடன், மேலும் பலதரப்பட்ட காலநிலை மற்றும் சுற்றாடல் தன்மைகளுக்கு ஈடுகொடுத்து உலகம் முழுவதும் பரவி வாழவும் இவர்களுக்கு வாய்ப்புக்கள் கிட்டின.

அந்தவகையில், எவரெஸ்ட் மலையைக் கடப்போருக்கு வழிகாட்டும் ஷெர்ப்பாக்களும் திபெத் வாசிகளும் உலகில் உயரமான மலைப்பிரதேசத்தில் வாழ்வதற்கான ஆற்றலைப் பெற்றதற்கான காரணம் மரபணுக்களே என்பது அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது அழிந்துபோய் விட்ட ஒரு மானிடர் சந்ததியில் நிகழ்ந்த மரபணு மாற்றத்தின் காரணமாகவே ஷெர்ப்பாக்களும், திபெத்தியர்களும் இந்த ஆற்றலைப் பெற்றுள்ளனர் என்றும் அந்தப் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## திரிபடைந்த மரபணுக்கள்

EPAS 1 என்ற திரிபடைந்த மரபணுக்கள் காரணமாக, இந்த பிரதேசத்தில் வசிப்போரது குருதியில் உள்ள ஹீமோக்ளோபின் சதவீதம் குறைவடைந்து காணப்படுகின்றது. உயர் வடமுனைக்கு வரும்போது பொதுவாக குருதியில் ஹீமோக்ளோபின் மட்டம் அதிகரிக்கும். ஆனால், திபெத் வாசிகளின் குருதியில் ஹீமோக்ளோபின் மட்டம் ஒரு குறிப்பிட்டளவு மட்டம்வரை உயர்ந்துவிட்டு அத்துடன் நின்றுவிடுகின்றது. திபெத் வாசிகளுக்கு கிடைத்துள்ள இந்த வியப்பான மாற்றம் குறித்து ஆராய எடுத்த முயற்சிகளின்போது, ஆராய்ச்சியாளர்களுக்கு வியப்பான தகவல்கள் பல கிடைக்கப்பெற்றன. ஏனெனில், மாற்றம் நிகழ்ந்ததாகக் கருதப்பட்ட காலப்பகுதியைவிட பல காலங்களுக்கு முன்னரேயே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தமையே இந்த வியப்புக்குரிய காரணமாகும்.




## டெனிசோவா குகை

2008 ஆம் ஆண்டில் டெனிசோவா குகையிலேயே முதன்முதலில் டெனிசோவாக்கள் பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தென் சைபீரியாவின் அல்தாய் மலைக்கு அருகாமையில் அமைந்துள்ள டெனிசோவா குகை விஞ்ஞான ரீதியில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள பிரதேசமாகும். 18 ஆம் நூற்றாண்டில் அந்த குகையில் வசித்த 'டெனிஸ்' என்ற சந்நியாசியின் பெயரால் இந்த குகை அழைக்கப்படுகின்றது. டெனிஸ் சந்நியாசியின் வருகைக்கு முன்னர் 'நியோலித்திக் மானிடர்கள்' மற்றும் 'துருக்கிய மேய்ப்பர்கள்' இங்கு வசித்துள்ளனர். அலெக்ஸாண்டர் சிபென்கோ என்ற ரஷ்ய தொல்லியல் அறிஞர் 30,000 முதல் 50,000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று கருதப்படும் மண் குவியல்களுக்குள் அகழ்வாராய்ச்சி செய்த போது, அவருக்கு சிறிய மனித எலும்பு ஒன்று கிடைத்துள்ளது. இதன்படி, அந்த எச்சப்படிமம் மனித எச்சப்படிமமாக இருக்கலாம் என்று அனுமானிக்கப்பட்டது. அத்துடன், அது எட்டு வயதுடைய சிறுவனது எலும்புத் துண்டு என்பது கண்டுபிடிக்கப்பட்டது.



## டெனிசோவான் ஹோமினின்


இந்த படிம எச்சம் கண்டுபிடிக்கப்பட்ட மண் குவியலில் இருந்து பச்சை நிறக் கல் பொறிக்கப்பட்ட கை அணிகலன் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இது நவீன மனித செயற்பாட்டிற்கு சான்றாக அமைவதனால், இந்த எலும்புத் துண்டும் நவீன மனிதனுடையதாக இருக்கக்கூடும் என்று சந்தேகம் ஏற்பட்டது. அத்துடன், இந்த எலும்பு கண்டுபிடிக்கப்பட்ட குகையில் மேலும் இரண்டு பற்கள் கிடைத்துள்ளன. இவற்றின் மரபணுக்கள் ஒரே விதமாக இருப்பதனால், விரல் எலும்பும்,



இரண்டு பற்களும் ஒரே மனிதனுக்குரியது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. 'டெனிசோவா' குகையில் இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதனால் இந்த புதிய மனிதனுக்கு 'டெனிசோவான் ஹோமினின்' என்று பெயர் சூட்டப்பட்டது.

**-ப்ரியா**

## பண்டைய கால உறவினர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# 'பூ'வைப் போன்ற 'பூச்சி'



பூவொன்றைப் போன்ற தோற்றத்திலான பூச்சி இனமொன்று இருப்பதாக கூறினால் நீங்கள் நம்புவீர்களா? இந்தப் பூச்சி அசல் ஓர்கிட் பூவைப் போலவே இருக்கின்றது. அது 'ஓர்கிட் மென்டிஸ்' (Orchid Mantis) என அழைக்கப்படுகின்றது. இந்த பூச்சி இனமானது, அதன் உருவத்தையும் உடல் நிறத்தையும் மாற்றிக்கொள்வதில் மிக வல்லமை கொண்டதாம்! இதன் உடல் வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிறங்களிலானது. அத்துடன், இந்த பூச்சியின் நான்கு கால்களும் பூவின் இதழ்களைப் போன்று இருக்கும். இதனால், பார்த்த மாத்திரத்தில் இதுவொரு பூவைப் போன்று காட்சியளிக்கும்.





ஓர்கிட் மென்டிஸ் பூச்சியானது; சூழல் நிலமை, ஈரப்பதன், ஒளியின் இயல்பு என்பனவற்றிற்கு ஏற்ப, தனது உடலின் நிறத்தை கபிலம் மற்றும் இளஞ்சிவப்பு நிறங்களில் மாற்றிக்கொள்ளும். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மழைக்காடுகளே இந்த பூச்சி இனத்தின் தாயகமாகும். மிகவும் அபூர்வமான இந்த பூச்சியினம் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அத்தகையதோர் ஆய்வினை அடுத்தே, ஓர்கிட் மென்டிஸ் பூச்சியானது, ஒரு பூவைப் போல தனது உருவத்தை மாற்றிக்கொள்ளும் என கண்டுபிடிக்கப்பட்டதோடு, அதை ஒரு பூவெனக் கருதி, அதனை நோக்கி வரும் வண்டுகளைக் கவர்ந்து உணவாக உட்கொள்வதிலும் அது மிகத் திறமை வாய்ந்தது என தெரியவந்துள்ளது.

ஓர்கிட் மென்டிஸ் மிக அற்புதமானதோர் உயிரினமாகும். தம்மை வேட்டையாட வரும் எதிரிகளிடமிருந்து தற்காத்துக்கொள்வதற்காக ஒரு பூவைப் போன்று மாறிக்கொள்ளும். அப்போது, அதன் எதிரிகளும் அதுவோர் ஓர்கிட் மலரென நினைத்து திரும்பிச் சென்றுவிடும். ஆனால், வண்டுகள் போன்ற தேன் உண்ணும் சிறிய பூச்சியினங்கள், இதனை பூவென நினைத்து தேனைப் பருக வந்து அந்த பூச்சியிடம் சிக்கிக் கொள்ளும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

-ஜெயகர்



































# தேசிய அடையாள அட்டையின் விபரங்கள்

'தேசிய அடையாள அட்டை' என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மேற்படி அடையாள அட்டையானது, 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் அத்தாட்சிப்படுத்தல்களுக்கமைய வழங்கப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டையின் இருபுறங்களிலும் இடம்பெறுகின்ற முக்கியமான சில விபரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலா, மாமி, ஜெயா ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

කමලා: නැන්දේ! ජේයා ඉන්නවද?
நெந்தே! ஜெயா இன்னவத?
கமலா: மாமி! ஜெயா இருக்கின்றாளா?

නැන්දා: ආ.. කමලා දුවනේ.ජේයා ඉන්නවා දුව. කාමරයේ ඇති.
ஆ.. கமலா துவனே. ஜெயா இன்னவா துவ. காமரயே எத்தி.
மாமி: ஆ.. மகள் கமலா. ஜெயா இருக்கிறாள் மகள். அறையில் இருப்பாள்.

කමලා: මම ගිහින් බලන්නම් නැන්දේ.
மம கிஹின் பலன்னம் நெந்தே.
கமலா: நான் போய்ப் பார்க்கிறேன் மாமி.

ජේයා: ආ.. කමලා, දැන් ද ආවේ?
ஆ... கமலா, தென் த ஆவே?
ஜெயா: ஆ... கமலா, இப்போதுதான் வந்தீரா?

කමලා: ඔව්. ඔයා මොනවද කරන්නේ?
ஒவ். ஒயா மொனவத கறன்னே?
கமலா: ஆம். நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

ජේයා: මම මේ පොතක් කියවනවා.
மம மே பொதக் கியவனவா.
ஜெயா: நான் ஒரு புத்தகம் வாசிக்கிறேன்.

කමලා: ඔයාගේ විනෝදාංශය පොත් කියවන එකද?
ஒயாகே வினோதான்ஷய பொத் கியவன எகத?
கமலா: புத்தகம் வாசிப்பது உங்களுடைய பொழுதுபோக்கா?

ජේයා: ඒක විතරක් නෙවේ. තව ඒවත් තියෙනවා.
ஏக்க விதரக் நெவே. தவ ஏவத் தியெனவா.
ஜெயா: அது மட்டும் இல்லை. இன்னும் இருக்கின்றன.

කමලා: වෙන මොනවද?
வென மொனவத?
கமலா: வேறு என்ன?

ජේයා: මම මුද්දර එකතු කරනවා. ටී.වී බලනවා. කවි ලියනවා.
மம முத்தர எகது கறனவா. டீ.வி பலனவா. கவி லியனவா.
ஜெயா: நான் முத்திரை சேகரிக்கிறேன். டீ.வி பார்க்கின்றேன். கவிதைகள் எழுதுகின்றேன்.

කමලා: ඇත්තද? මම නම් මල් වවනවා. චිත්‍ර අඳිනවා. ටී.වී බලනවා.
எத்தத? மம நம் மல் வவனவா. சித்ர அந்தினவா. டீ.வி.பலனவா.
கமலா: அப்படியா? நானென்றால் பூக்கள் வளர்க்கின்றேன். ஓவியங்கள் வரைகிறேன். டீ.வி.பார்க்கின்றேன்.

ජේයා: එන්න ඔයාට මගේ මුද්දරයි කවි ලියපු ඒවයි පෙන්වන්න.
என்ன ஒயாட்ட மகே முத்தரய் கவி லியப்பு ஏவய் பென்வன்ன.
ஜெயா: வாருங்கள் உங்களுக்கு என்னுடைய முத்திரைகளையும் எழுதிய கவிதைகளையும் காட்டுகின்றேன்.



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. ஜெயா இருக்கிறாளா?
..............................................

ii. அறையில் இருப்பாள்.
..............................................

iii. புத்தகம் வாசிக்கிறேன்.
..............................................




'தொழிற்பெயர்' சொற்கள் (Gerunds) வேறொரு சந்தர்ப்பத்தில், பெயருரிச் சொற்களாகவும் (பெயரெச்சம்-Adjective) செயல்படுகின்றன. இவற்றையும் உதாரணங்கள் மூலம் இங்கே அவதானிப்போம்.

அ) My sister has a drawing book.
எனது சகோதரியிடம் ஒரு வரைதல் புத்தகம் உண்டு.

- மேற்படி வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள (book) 'புத்தகம்' என்பது பெயர்ச்சொல் (Noun) ஆகும்.
- 'வரைதல்' எனும் சொல், இங்கே 'புத்தகம்' எனும் பெயர்ச்சொல்லை (Noun) சிறப்பித்துக் கூறுகின்றது. எனவே, 'வரைதல் புத்தகம்' என ஆகின்றது.
- இந்த 'வரைதல்' எனும் சொல், 'புத்தகம்' எனும் பெயர்ச்சொல்லை சிறப்பித்துக் கூறுவதால், 'வரைதல்' என்பது, பெயருரிச் சொல்- (பெயரெச்சம் -Adjective) என இலக்கண ரீதியாகக் கூறப்படுகின்றது.
- book - பெயர்ச்சொல் (Noun)
- drawing - பெயருரிச் சொல் (Adjective)
- drawing book - வரைதல் புத்தகம்.

**குறிப்பு:** **பெயர்ச்சொல் (Noun) ஒன்றைச் சிறப்பித்துக் கூறும் மற்றுமொரு சொல், பெயருரிச் சொல் (Adjective) ஆகும் என்பது இலக்கண விதி.**

இலக்கண விதியின் ஆங்கில வடிவம் வருமாறு:
A word which describes a noun is an Adjective.

- இதன் அடிப்படையில், 'ing' சேர்த்துவரும் ஆங்கில வினைச்சொற்கள், பெயருரிச் சொற்களாகவும் (Adjective) செயல்படுகின்றன என்பது கண்கூடு.
- **மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்.**

ஆ) Ranjith goes to the swimming pool in the morning.
ரஞ்சித் நீச்சல் தடாகத்துக்கு காலையில் செல்கின்றான்.

- இங்கே, நீச்சல் (swimming) எனும் சொல், தடாகம் (pool) எனும் பெயர்ச்சொல்லை (Noun) சிறப்பித்துக் கூறுகின்றது. எனவே, 'நீச்சல்' என்பது, பெயருரிச் சொல் (Adjective) ஆகின்றது.

| | |
|---|---|
| ✱ தடாகம் - பெயர்ச்சொல்.<br>pool - Noun. | ✱ நீந்துகின்ற - பெயருரிச் சொல்.<br>swimming - Adjective. |

இ) I saw a singing bird on that tree.
நான் மரத்தின் மேல் பாடும் பறவை ஒன்றைக் கண்டேன்.

| | |
|---|---|
| ✱ பறவை - பெயர்ச்சொல்.<br>bird - Noun. | ✱ பாடுகின்ற - பெயருரிச் சொல்.<br>singing - Adjective. |

ஈ) You bought a travelling bag.
நீ பயணப்பை ஒன்று வாங்கினாய்.

| | |
|---|---|
| ✱ பை - பெயர்ச்சொல்.<br>bag - Noun. | ✱ பயணிக்கின்ற - பெயருரிச் சொல்<br>travelling - Adjective. |

உ) He stretch out his helping hands to me.
அவன் தனது உதவும் கரங்களை எனக்கு நீட்டினான்.

| | |
|---|---|
| ✱ கரங்கள் - பெயர்ச்சொல்.<br>hands - Noun. | ✱ உதவுகின்ற - பெயருரிச் சொல்.<br>helping - Adjective. |

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5810
சே.டினோஜா,
நாவலர் பண்ணை,
கிளிநொச்சி.


அங். இல: 5811
என்.எம்.றிஸ்கான்,
ஹேவத்த,
பாணந்துறை.


அங். இல: 5812
டி.கிரிஷாந்த்,
கொடுகொடல்ல,
பலாங்கொடை.


அங். இல: 5813
யே.தனுஷா,
அந்தோனியார் வீதி,
இளவாலை.


அங். இல: 5814
ப.கிசாந்தன்
ரொட்ரிகோ ஒழுங்கை,
தெஹிவளை.


அங். இல: 5815
அஹமட் நுஸ்கான்,
எகடகல்லவத்தை,
பொத்துஹெற.


அங். இல: 5816
எம்.எச்.இம்ஃபாஸ்,
சியம்பலாகஸ்கொட்டுவ,
கெகுணகொல்ல.


அங். இல: 5817
வி.சபிதா,
முகத்தான்குளம்,
செட்டிக்குளம்.


கைவினைக்கலை

# இதழ்களைச் சேர்த்து பூக்கள் செய்வோம்!

**தேவையான பொருட்கள்:**


* சதுர வடிவ நிறக்கடதாசிகள் - 4 (விரும்பிய நிறங்கள்)
* பேனா மைக்குழாய் - 1

**1 ஆவது படிமுறை:**



படத்தில் உள்ளவாறு, கடதாசியை நான்கு சம பகுதிகளாக மடித்து விரித்துக் கொள்ளுங்கள்.


**2 ஆவது படிமுறை:**






பின்னர் அதனை புள்ளடி வடிவத்தில் மடித்து விரித்துக்கொள்ளுங்கள். கடதாசியின் மடிப்பு படத்தில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.

**3 ஆவது படிமுறை:**




இப்பொழுது மடிப்புக்கு ஏற்ற வாறு ஒன்றன்மீது ஒன்று வைத்து முக்கோணம் ஒன்று கிடைக்குமாறு கடதாசியை தயாரிக்க வேண்டும்.


**4 ஆவது படிமுறை:**



பேனா மைக்குழாயை எடுத்து, கடதாசியின் ஒரு பகுதியின் மூலையில் குழாயை வையுங்கள்.

**5 ஆவது படிமுறை:**





குழாயைச் சுருட்டி குழாயினைச் சுற்றி வர ஒட்டுங்கள். இதழை முழுமையாகச் சுற்றுங்கள்.

**6 ஆவது படிமுறை:**



அவற்றை கைகளால் சரிப்படுத்தி வடிவத்தை முழுமைப்படுத்திக்கொள்ளுங்கள்.

**7 ஆவது படிமுறை:**



நான்கு இதழ்களையும் குழாயின் உதவியுடன் படத்தில் காட்டி யுள்ளவாறு சுற்றிக்கொள்ளுங்கள். இப்பொழுது அழகிய பூ ஒன்று தயார்.

**8 ஆவது படிமுறை:**



இவ்வாறான பூக்கள் நான்கை சுருட்டி தயாரித்துக்கொள்ளுங்கள்.

**9 ஆவது படிமுறை:**



இப்பொழுது இந்த நான்கு பூக்களினதும் இதழ்களை ஒன்று டன் சேர்த்துக்கொள்ள வேண்டும். படத்தினைப் பார்த்து செய்முறையை நன்கு விளங்கிக் கொள்ளுங்கள். அப்பொழுது அழகிய பூக்களை உங்களால் உருவாக்க முடியும்.



## தெரிந்து கொள்வோம்

* **ஏப்ரல் 12 ஆம் திகதி உலக விண்வெளி தினமாகும். இத்தினம் எத்தகைய காரணத்திற்காக தெரிவுசெய்யப்பட்டது?**




ரஷ்யாவைச் சேர்ந்த யூரி ககாரின் ஏப்ரல் 12 ஆம் திகதி முதன்முதலில் செய்மதி மூலம் உலகைச் சுற்றி வந்த தினமாகும்

* **உலகில் மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழும் ஜனாதிபதி யார்?**



உருகுவே நாட்டின் ஜனாதிபதி 'ஜோஸ் முஜிகா' ஆவார்

* **1955 இல் ஒட்சிசனைக் கொண்டு செல்லாமல் இமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் யார்?**

'அலிசன் ஹார் கிவேஸ்வன்' எனும் ஐக்கிய ராச்சியப் பெண்மணியாவார்

* **முதன்முதலில் நொபெல் பரிசு பெற்ற தமிழர் யார்?**



கணித மேதை ஸ்ரீனிவாச இராமனுஜம். இவரது பிறந்த தினம் இந்தியாவில் கணித தினமாக நினைவுகூரப்படுகின்றது.

* **2011 ஏப்ரல் 2 ஆம் திகதி ஒசாமா பின்லாடன் 'SEAL' எனும் அதிரடி இராணுவ நடவடிக்கை மூலம் கொல்லப்பட்டார். 'SEAL' என்பது எதனைக் குறிக்கின்றது?**



கடல், தரை, ஆகாயம், என்ற படைகளின் நடைமுறைமூலம் 40 நிமிடத்தில் தாக்கிக் நடத்தப்பட்ட தாக்குதலைக் குறிக்கின்றது.

-உடுவை பரந்தாமன்

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ......................................
முகவரி: ......................................
......................................
பாடசாலை: ......................................
வகுப்பு: ......................................
திகதி: ......................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

**அனுப்ப வேண்டிய முகவரி :**
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் மாகாணங்களுக்குரிய தலைநகரங்கள்

★ வட மாகாணம் - யாழ்ப்பாணம்
★ வடமத்திய மாகாணம் - அநுராதபுரம்
★ வடமேல் மாகாணம் - குருநாகலை
★ மத்திய மாகாணம் - கண்டி
★ மேல் மாகாணம் - கொழும்பு
★ சப்ரகமுவ மாகாணம் - இரத்தினபுரி
★ ஊவா மாகாணம் - பதுளை
★ கிழக்கு மாகாணம் - திருகோணமலை
★ தென் மாகாணம் - காலி

ந.விஜயலட்சுமி, பது/ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்., ஒலுகலை.

## பேராசை



ஒரு நாய்க்கு கோழிமுட்டைகள் மீது அலாதியான பிரியம். எனவே, அது முட்டைகளைத் தேடிப்பிடித்து விழுங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. ஒருநாள் அந்த நாய் நீர்நிலை ஒன்றின் அருகே சென்றுகொண்டிருந்தபோது, ஒரு நண்டைப் பார்த்து முட்டை என்று நினைத்து பாய்ந்து சென்று 'லபக்' என்று கௌவி விழுங்கிவிட்டது. நண்டை உயிருடன் விழுங்கியதால், நாய்க்குத் தாங்க முடியாத வயிற்றுவலி ஏற்பட்டது. கீழே விழுந்து புரண்டது. ஊளையிட்டு அழுதது. பின்னர்தான் நாய்க்குப் புரிந்தது தான் முட்டை என்று எண்ணி வேறு எதையோ விழுங்கிவிட்டதாக.

உருண்டையாக இருப்பதெல்லாம் முட்டைகள் அல்ல என்று எண்ணக்கூடிய அறிவு என்னிடம் இருந்திருந்தால் இவ்வாறான தண்டனைக்கு உள்ளாகி இருப்பேனா? என வருந்தி தனது பேராசையை எண்ணி நொந்தது நாய்.

எம்.எம்.நபா, கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.



## 'டை' தோன்றிய விதம்



முதன்முதலில் ரோமாபுரியைச் சேர்ந்த படைவீரர்கள் சிலர் குளிருக்காக தங்களது கழுத்தைச் சுற்றி சிறு துணியை சுற்றிக்கொண்டார்கள். அது குளிர்காலத்தில் இதமாக இருந்ததுடன், வெயில் காலத்தில் வியர்வையை உறிஞ்சக் கூடியதாகவும் இருந்தது.

காலப்போக்கில் ஏனைய படை வீரர்களும் இதையே பின்பற்றத் தொடங்கினர். பிரெஞ்சு புரட்சியின்போது அவர்கள் சார்ந்த கட்சியைக் குறிக்கும் விதத்தில் வெவ்வேறு நிறங்களில் இவ்வாறு துணியை சுற்றிக் கொண்டனர். குரோஷிய இராணுவத்திடம் இருந்து அந்த கழுத்துப்பட்டியின் அமைப்புகளையும், 'Hrvati' என்ற சொல்லையும் பெற்றுக் கொண்டனர். இதுவே கழுத்துப் பட்டியின் அறிமுகமும் நாகரிக உடையின் அடையாளமுமாக ஆனது. தற்காலத்தில் உடைகளுக்கிடையே வண்ணத்தை அள்ளித் தெளிப்பது போல் கழுத்துப்பட்டிகள் விதவிதமாக வடிவமைக்கப் பட்டுள்ளன.




பாத்திமா இன்சியா, தெலம்புகல்ல, தொடங்கஸ்லந்த.

## விஞ்ஞான விளக்கங்கள் சில...

1. அதிகம் அழுதால் மூக்கிலிருந்து நீர் வருகிறதே... அது ஏன்?

கண்ணில் இருந்து மூக்குக்குழிக்கு ஒரு குழாய் உள்ளது. நாம் அதிக கண்ணீரை வெளியிடும் சந்தர்ப்பங்களில் மேலதிக கண்ணீர் மூக்குக்குழி வழியாக வெளிவரும். இதனாலேயே மூக்கினூடாக நீர் வருகிறது.

2. மூன்று கல் அடுப்பை விடச் சூட்டடுப்பு சிறந்தது. அது ஏன்?



மூன்று கல் அடுப்புகளைப் பயன்படுத்தி தீயை எரிப்பதனால் பெறப்படும் வெப்பம் பெருமளவு சூழலில் இழக்கப்படுகின்றது. ஆனால், சூட்டடுப்பில் வெப்பம் வெளியேற இடைவெளி இல்லாமையால் வெப்ப இழப்பு குறைக்கப்படுகிறது.

3. நீரிழிவு நோயாளியின் உடலில் நீரிழிவு நோயால் உண்டான புண் குணமடைவதில்லை.

நீரிழிவு நோயாளியின் குருதியில் அதிகளவு குளுக்கோஸ் காணப்படுவதால், புண்களில் கிருமிகள் பல்கிப் பெருகத் தேவையான உணவு இலகுவில் கிடைக்கின்றது. இதனால், புண் குணமடைவது தடுக்கப்படுகின்றது.


4. ஒளியில் நின்று இருளில் நிற்பவரைப் பார்க்க முடியாது.

இருளில் நின்று ஒளியில் நிற்கும் ஒருவரைப் பார்க்க முடியும்.

பார்க்க வேண்டியவர் ஒளியில் நின்றால்தான் ஒளி அவரின் உடலில் பட்டுத் தெறிப்படைந்து எமது கண்ணில் பட்டவுடன் நாம் அவரைப் பார்க்க முடியும். இருளில் நிற்பவராயின், அவரின் உடலிலிருந்து ஒளி வருவதில்லை என்பதால் அவரை நாம் ஒளியில் நின்று பார்க்க முடியாது.

ஜே.எம்.அக்ரம், ஸாஹிரா கல்., புத்தளம்.

## அதிசய உடல்



* சாதாரணமாக இடது கையைக் காட்டிலும், வலது கை நகங்களே வேகமாக வளர்கின்றன. இடது கைப்பழக்கம் உள்ளவர்களுக்கு மட்டும் இடது கை நகங்கள் வேகமாக வளர்கின்றன.
* சராசரி மனிதன் ஒருவனின் உடல் மேல் போர்த்தப்பட்டுள்ள தோலின் பரப்பளவு இருபது சதுர அடிகளாகும்.
* உடலின் இரு பாதிகளில் ஒரு பாதி மற்றைய பாதியை விட சற்றுப் பெரிதாக இருக்கும்.
* நாம் தும்மும் வேகம் மணிக்கு 320 கி.மீற்றர்.
* மனிதர்களின் கைரேகை ஒருவருக்கொருவர் மாறுபட்டிருக்கும்.
* கண்களில் கண்ணீரை உருவாக்கும் சுரப்பியின் பெயர் 'லாச்ரிமல் கிளாண்ட்ஸ்' என்பதாகும்.

ஷப்னிஸ் அஹமட் ரிஸ்வான், ஊவா விஞ்ஞான கல்., பதுளை.

## பூக்கள்



தாவரக் குடும்பம்
பெற்ற
தவப் புதல்வியர்!

வானவில்லிடம் வர்ணம் வாங்கி
வாசனையோடு நிற்கும்
வசந்த குமாரர்கள்!

சுகமான சுமையாக
சுந்தரப் பனித்துளியைச்
சுமந்தபடி நிற்கும்
சுமைதாங்கிகள்!

தென்றலோடு சேர்ந்து
தெம்மாங்கு பாடும்
தேவதைகள்!

எம்.எஸ்.எம்.ரமாஸ், கைரியா நகர், மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 17.09.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 41
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

**பரிசுப் பொதி**
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=


**1** கீழே பெயரிடப்பட்டுள்ள உருக்களை பிரதான படத்தில் இனங்கண்டு, நிறந்தீட்டுக





**2** '?' உள்ள இடத்திற்குப் பொருத்தமான பகுதியை இரண்டாவது வரிசையிலிருந்து தெரிவுசெய்க.



**3** ஒரே பிரிவுக்குள் அடங்கக்கூடிய பொருட்களை இணைக்க



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 102



**மேலிருந்து கீழ்**

01. இசைக்கருவியொன்று.
02. ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக பலரை உள்ளடக்கி அமைக்கப்படுவது.
03. 'உணர்' என்றும் பொருள்படும்.(தலைகீழ்)
05. விலங்கு.
06. '.............. ஆனாலும் கசக்கிக் கட்டு' என்பது பழமொழி.
07. ஏறி-இறங்க அமைக்கப்படுவது. (தலைகீழ்)
08. இறத்தல்.

**இடமிருந்து வலம்**

01. நாளாந்தம் நடப்பவற்றை குறித்து வைக்கப் பயன்படும்.
03. 'சிரி' என்பதன் எதிர்ப்பதம். (மாறியுள்ளது)
04. ருசி.
05. வறுமை. (மாறியுள்ளது)
07. சிலரின் முகத்தில் தோன்றும்.
08. வேகமில்லாத தன்மையைக் குறிக்கும். (மாறியுள்ளது)
09. துணிவு.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.101 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | ன் | னை | 2 தெ | ரே | 3 சா |
| மு | ■ | ■ | ப் | ■ | த |
| த | ■ | லி | ப | ம் | 4 க |
| 5 சு | வா | ச | ம் | ■ | ம் |
| ர | ■ | 6 ப | ■ | கி | ■ |
| 7 பி | டி | ■ | 8 பா | 9 ச | றை |

Sponsored by


NATARAJ
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 39 விடைகள்

போட்டி: 01

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| moon | j | o | w | t | r | a |
| boat | m | c | d | q | c | r |
| crab | o | r | e | b | l | i |
| deer | o | a | e | o | o | a |
| cloud | n | b | r | a | u | h |
| chair | s | v | o | t | d | c |

போட்டி: 02



போட்டி: 03




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 39 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
எஸ்.யூடித் மரியா, மட்டக்களப்பு.

**2ஆம் பரிசு**
ஸாரா ஹபீஸ், திஹாரி.

**3ஆம் பரிசு**
ப.கிசாந்தன், தெஹிவளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- வி.ஜோதிமலர், பிட்டகந்த.
- ஆதில் முய்ஸ், தெமடகஸ்தன்ன.
- ப.பிரித்திகா, கோப்பாய் - தெற்கு.
- என்.ஹரிஸ், கொழும்பு - 13.
- பா.லியாதா, ஏறாவூர் - 2A.
- ஆர்.சந்தியா, பண்டாரவளை.
- எஃப்.சாரா, கல்பிட்டி.
- என்.நெஹாரா, வத்தளை.
- எம்.ராஷித், தெமட்டகொடை.
- பி.அகிலன், பூண்டுலோயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.நாராயணி,
யா/வேம்படி மகளிர் கல்.,
யாழ்ப்பாணம்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




மோ.துஜீபன்,
வவுனியா த.ம. ம.வித்., வவுனியா.



நிரோஷன் ரவி,
முகத்துவாரம் இந்.கல்.,
கொழும்பு-15



எம்.ஹில்மி,
தி/அன் நஜாத் மு.வித்., கிண்ணியா.



எஃப்.சாகிரா,
போகஹகும்புரை மு.வித்.,
மஹகந்துரை.




ஆர்.விசோதன்,
ஸ்ரீ கிருஷ்ணா ம.வித்.,
கஹவத்தை.



ம.மயூரன்,
கொ/குமர உதயம் வித்.,
கிருளப்பனை.



எஃப்.அப்ஸா,
முஸ்லிம் பாலிகா வித்.,
கஹட்டோவிட்ட



ப.தயாயுதன்,
கிளிநொச்சி ம.வித்.,
கிளிநொச்சி.



லிந்துல டியனிலகலயைச் சேர்ந்த ஸ்டேன்லி-ஜெனிட்டா தம்பதியரின் செல்வப் புதல்வன் சேம் ஸ்டேன்லி, தனது பதினான்காவது பிறந்ததினத்தை 11.09.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



வலப்பனை-மஹாஊவாவைச் சேர்ந்த யேசுதாஸன்-மேரி சுசிலா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜெராட் சாள்ஸ், தனது பதின்மூன்றாவது பிறந்ததினத்தை 16.09.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: லூட்ஸ்மேரி)



இப்பாகமுவ கும்பலங்கயைச் சேர்ந்த ஜனூபா- ரியாஸ் தம்பதியரின் அருமைப் புதல்வி ரபா, 06.09.2014 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சகல வளங்களுடனும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஐ.கே.துல்பியா)



நிந்தவூர்-06 நெசவு நிலைய வீதியைச் சேர்ந்த முஹம்மட் பாரிஸ்-நஸ்ரின்ஜஹான் தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா நிபா, தனது முதலாவது பிறந்தநாளை 30.08.2014 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: முபாரக் நளீம்)

# வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான சர்ச்சைக்குரிய ஓவியங்கள்

பறக்கும் தட்டுக்கள் தொடர்பான மர்மங்கள் இன்றுவரை புதிராகவே உள்ளன. வேற்றுக்கிரகவாசிகள் பறக்கும் தட்டுக்கள் மூலம் பூமியை நோக்கி வருவதாகவும், அவை வெறும் கற்பனைகளே எனவும் ஆய்வாளர்கள் இருவகைப்பட்டு வாதிட்டு வருகின்றனர். இத்தகைய சர்ச்சைகளை மேலும் அதிகரிக்கு முகமாக தற்போது இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் வேற்றுக்கிரவாசிகள் மற்றும் பறக்கும் தட்டைச் சித்தரிக்கின்ற 10 ஆயிரம் வருடங்கள் பழமையான குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சரமா பிராந்தியத்தின் ராய்பூர் நகரிலிருந்து 130 கி.மீற்றர் தொலைவிலுள்ள கொட்டிடொலா மற்றும் சண்டெலி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள குகை ஒன்றிலேயே இந்த பழங்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹொலிவூட் மற்றும் பொலிவூட் திரைப்படங்களில் சித்தரிக்கப்படும் வேற்றுக்கிரகவாசிகளின் தோற்றத்தை இந்த ஓவியங்கள் பிரதிபலிப்பதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.





"தற்போதும் மக்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடையே பேசப்படும் வேற்றுக்கிரவாசிகளை வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் பார்த்திருக்கலாம் அல்லது வேறு கிரகத்தில் வசிப்பதாக அவர்கள் கற்பனை செய்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இது குறித்து மேலதிக தகவல்களை அறியவும் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான இத்தகைய குழப்பங்களைத் தீர்ப்பதற்கும் விரிவுபட்ட ஆய்வுகள் தேவையாக உள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

### சுற்றாடல்

(செப்டெம்பர் 03 இல் பிரசுரமான வினாக்களுக்கான விடைகள் )

01)
| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 05. 3 | 09. 3 | 13. 3 |
| 02. 2 | 06. 3 | 10. 2 | 14. 1 |
| 03. 3 | 07. 3 | 11. 3 | 15. 3 |
| 04. 3 | 08. 1 | 12. 2 | |


02)
| | | | |
|---|---|---|---|
| 01. (✓) | 03. (✗) | 05. (✓) | 07. (✓) |
| 02. (✗) | 04. (✓) | 06. (✗) | |

03) 01. ஆந்தை 02. வண்ணத்துப்பூச்சி
03. வாத்து 04. நத்தை 05. வெளவால்

04) 01. மகாவம்சம் 02. கல்வெட்டுக்கள்
03. கும்மி 04. பத்திரிகை
05. மரச்செதுக்கல்

05) 01. மரச்செதுக்கல், சிற்பக்கலை
02. தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி
03. தொலைபேசி
04. மரங்கள் வளர்த்தல், வாய்க்கால்கள் அமைத்தல், புற்கள் வளர்த்தல்.
05. கத்தரிக்கோல், பாக்குவெட்டி, சாய்தளம், சாவணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின் நாஸா நிறுவனம் தனது புத்தம்புதிய விண்வெளி ஓட கோட்பாட்டினைப் பற்றி ஊடகங்களுக்கு அண்மையில் கருத்து தெரிவித்திருந்தது. 'விண்வெளி ஓட டெக்ஸி' ரகம் குறித்தே

# நாஸாவில் 'விண்வெளி ஓட டெக்ஸி'

அவர்கள் அதிக அக்கறை செலுத்தியுள்ளனர். சர்வதேச விண்வெளி நிலையத்திற்கும் வேறு விண்வெளிப் பகுதிகளுக்கும் விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்வதே இந்த புதிய முறையின் இலக்காகும். இவ்விடயம்







குறித்து தற்போது விண்வெளி ஓட நிறுவனங்கள் பல புதிய திட்டங்களை சமர்ப்பித்துள்ளன. இது ஒரு போட்டி முறையிலும் இடம்பெறுகின்றது. இந்த போட்டியில் Boeing என்ற நிறுவனம் முன்னணி இடத்தினை வகிக்கின்றது. Crew Space Tranpotation (SCT-100) என்று அழைக்கப்படும் இந்த ஓடம் விண்வெளி வரை பறக்க வைக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர, ஸ்பேஸ் எக்ஸ், சியெரா நெவாடா, ப்ளு ஒரிஜின் மற்றும் அமேசொன். com போன்ற நிறுவனங்களும் இந்தப் போட்டியில் இணைந்து கொண்டுள்ள விண்வெளி ஓட தயாரிப்பு நிறுவனங்களாகும். இந்த தயாரிப்புகளுள் சிறந்த தயாரிப்பு செப்டெம்பர் மாத முதல் வாரமளவில் தெரிவு செய்யப்படும் என்று நாஸா நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த Boeing நிறுவனத்தின் Crew Space Tranpotation விண்வெளி டெக்ஸி வாகனத்தில் ஒரே நேரத்தில் ஏழு பேர் பயணிக்கக் கூடியதாக இருக்கும். மேலும், இந்த ஓடம் அமெரிக்காவின் அற்லஸ் 5 ரெக்கெட்டினூடாகவே விண்வெளிக்கு ஏவப்படவுள்ளது.

இவ்வாறான புதிய வகை விண்வெளி ஓடம் குறித்து சிந்திப்பதற்கு காரணமான சில விடயங்கள் உள்ளன. குறிப்பாக, விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்லும் செலவீனத்தினைக் கட்டுப்படுத்துவது இதில் பிரதான விடயமாகும். தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்லும் பல ரொக்கெட்டுகள் ரஷ்ய நிலப்பரப்பில் இருந்தே விண்வெளிக்கு ஏவப்படுகின்றன. இதனைத் தவிர்ப்பது மற்றுமொரு குறிக்கோளாகும். ஆனாலும் இந்த Crew Space Tranpotation ஓடத்தை ஏவும் அற்லஸ் ரொக்கெட்டில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டுள்ள RD-180 ரக எஞ்சினே பொருத்தப்பட்டுள்ளது.

இதனால், தமது பெரும் பகையாளியான ரஷ்யாவைத் தவிர்த்து குறைந்த செலவிலான விண்வெளி டெக்ஸி சேவையினை அமுல்படுத்த முடியாத நிலைமையும் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.














## வசிப்பதற்கு ஏதுவாக

# வாகனம் போன்ற வீடு

இந்த வாகனம், வீடு போன்றுதான் எமக்குத் தோற்றமளிக்கிறது. ஆனால், இது பயணிக்கக்கூடிய வீடு. இதனை 'Cypress 24 Model' என்று அழைக்கின்றனர். தற்போதைய உலகில் மனிதர்களுக்கு வாழ்வதற்கான இடப்பரப்பு குறைந்து கொண்டிருக்கின்றது. இந்த இடநெருக்கடி காரணமாக சிலர் இவ்வாறான சிறிய இடத்தில் வசிக்க விரும்புகின்றனர். சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமான இந்த பயணிக்கும் சிறிய வீட்டு முறை இப்பொழுது பெரியளவில் பிரபல்யம் பெற்றுள்ளது. இவ்வாறான வீடுகளில் வசிக்க பலர் தற்போது விரும்புகின்றனர் என்றே தெரியவருகின்றது. இவை 1000 அடி சதுரப்பரப்பு முதல் 100 அடி சதுரபரப்பு வரை பல அளவுகளில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயிற்றுக்கலையில் தேர்ச்சி பெற...

**சாரணர் ஆலோசனை**

புதிதாக சாரணியத்தில் இணைபவர்களுக்கான முக்கியமான செயற்பாடுதான் 'கயிற்றுக்கலை'. இதனை சாரணர்கள் மிகவும் ஆர்வத்துடன்







மேற்கொள்வார்கள். இச்செயற்பாடு சாரணர்களுக்கு புதிய சிந்தனைகளையும், திறன்களையும் கற்றுக்கொடுக்கின்றது. சாரணன் தனது விருப்பத்திற்கிணங்க கட்டுக்களைப் பயன்படுத்தி தடிகள் மற்றும் மரங்களைக் கொண்டு அமைக்கும் வினைத்திறன் மிக்க செயற்பாடாகவும் கயிற்றுக்கலை திகழ்கின்றது.

இவ்வாறான செயற்பாட்டுக்கு நீங்கள் எவ்வாறு முகம் கொடுத்துள்ளீர்கள்? திட்டமிடாத அல்லது அது தொடர்பான தெளிவின்மையால் சில சமயங்களில் உங்களால் வெற்றிகரமாக கட்டுக்களை அமைக்க முடியாமல் போயிருக்கலாம், உங்களால் அமைக்கப்பட்ட பாலத்தில் ராட்டினத்தில் அல்லது கண்காணிப்புக் கோபுரத்தில் நீங்கள் ஏறும் வேளைகளில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கலாம், இவற்றுக்கான காரணங்கள் யாவை?, இவற்றை எவ்வாறு சரிவரக் கையாளலாம் என சிந்தித்து பல திருத்தங்களை நீங்கள் மேற்கொள்ள முனைந்திருக்கலாம். அவ்வாறான சில செயற்பாடுகளையே இங்கு நீங்கள் பார்க்கப் போகின்றீர்கள்.

முதலில் நீங்கள் கட்டுக்குப் பொருத்தமான கயிற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் பொருத்தமான அளவுடைய தடிகளைப் பெறவேண்டும். இதன் பின் ஒரு கட்டுக்காக







எவ்வளவு கயிறு தேவை என்பதை திட்டமிட்டு, அந்த அளவு கயிற்றினை மரக்குற்றி ஒன்றில் வைத்து கைக் கோடரி அல்லது பொருத்தமான கத்தி கொண்டு பல துண்டுகளாக்க வேண்டும்.

அதன் பின்னர் உங்கள் இடது கையின் விரல்களை விரித்து கொள்ளும்போது பெருவிரல் மற்றும் சிறிய விரல் என்பவற்றை வலது கையினைப் பயன்படுத்தி (தங்கள் வசதியைப் பொறுத்து) கயிற்றினால் சுற்றிச் சுற்றி வளையமாக அமைத்தபின்னர், இறுதியாகக் கிடைக்கும் கயிற்றின் நுனியை அந்த வளையமாக்கப்பட்ட கயிற்றுச் சுருளைச் சுற்றி சிறிய செருகலான கட்டுப் போடுங்கள். இதனை 'சும்மாடு போடல்' என்பர்.

## விஜய் சாரணர் உலகம்

இவ்வாறு தேவையான சும்மாடுகளை அமைத்துக்கொண்டு அவற்றை நீரில் நனைத்து, தேவையான கட்டுக்களுக்குப் பயன்படுத்த முடியும். கயிறு நீரில் நனைந்திருப்பதால், கட்டுக்களை இறுக்கமாகக் கட்ட முடியும். கயிற்றுக்கட்டின் போது நான்கு அல்லது ஐந்து சுற்று இறுக்கமாக இழுத்து சுற்றிக் கட்டியதன் பின்னர், அதற்கு 'வண்டிக்கட்டினை' போட்டு இணைப்புத் தடியில் 'முளைத்தும்புக் குளைச்சுக்' கட்டினைக் கட்ட வேண்டும். இந்த முறையில் கயிற்றைக் கட்டி முடித்துக் கொண்டால், நீங்கள் கட்டிய கட்டு இறுக்கமாக இருக்கும். பின்னர் மிகுதியாக இருக்கும் கயிற்றினைக் கட்டின் இடைவெளியில் செருகிவிடுதல் வேண்டும். இவ்வாறு சிறப்பாகக் கட்டுகளை நீங்கள் அமைத்துக்கொண்டால், உங்கள் பாலத்தில் அதிகமானோர் பயணிப்பார்கள். அவர்களுக்கு நீங்கள் ஒரு முன்னோடியாகவும் இருக்கலாம்.

### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஓகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| எஸ்தோனியா | 1,423 | 1922/1996 | 1911/1989 |


தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)





## சமாதானத் தூதுவன் நிகழ்ச்சித் திட்டம்!

சர்வதேச எழுத்தறிவு தினம் செப்டெம்பர் - 08 மற்றும் சர்வதேச சமாதான தினம் செப்டெம்பர் - 21 ஆம் திகதிகளில் கொண்டாடப்படுகின்றது. இந்த இரு தினங்களை நினைவில் கொண்டு, நகரத்தில் அல்லது உங்கள் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு சமாதானச் செய்தியாக அன்பு, ஆறுதல், இரக்கம் கொண்ட சொற்களை உட்படுத்தி கடிதங்களை அனுப்புங்கள். இச்செய்தி சர்வதேச ரீதியில் அனைத்து சாரணர்களுக்கிடையிலும் பரிமாறப்படுகின்றது. சமாதானத்திற்கான இச்செய்தியை நீங்களும் உங்களது நண்பர்கள் சுற்றத்தார் அனைவருக்கும் அனுப்புவதனூடாக சமத்துவத்தையும் ஒற்றுமையையும் பகிர்ந்துகொள்ளலாம்.




## குருளைச் சாரணர் இயக்கம்

குருளைச் சாரணர் இயக்கம் (Cub Scout) என்பது உலகம் பூராகவும் காணப்படும் சாரணர் இயக்கத்தின் ஒரு பகுதியாகும். இது 7 தொடக்கம் 11 வயது வரையிலான ஆண் பிள்ளைகளுக்கான ஓர் இயக்கம் ஆகும். இதன் உண்மையான விரிவாக்கம் 'ஓநாய்க் குருளையினர்' (Wolf Cubs) என்பதாகும். எனினும், சுருக்கமாக குருளைச் சாரணர் (Cubs) என்று அழைக்கின்றனர். இது ஆண் பிள்ளைகளுக்கே உரித்தானது. எனினும், 1990 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்காவைத் தவிர்ந்த, சில நாடுகளில் இது இரு தரப்பினருக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றது. மேலும், சில நாடுகளில் குருளைச் சாரணர் இயக்கத்தின் ஒரு பகுதியான கடற் சாரணர் இயக்கமும் காணப்படுகின்றது.




குருளைச் சாரணர் இயக்கமானது, 1916 ஆம் ஆண்டில் சாரணியத் தந்தை பேடன் பவல் அவர்களால் நிறுவப்பட்டது.

### 122 ஆவது சாரணர் உயர் கற்கைநெறி

எதிர்வரும் ஒக்டோபர் 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையில் நுவரெலியாவின் பீட்ரு சாரணர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யா

கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த கென்யா இந்து மகா சமுத் திரத்தின் கரையில் அமைந்துள்ளது. இங்கு ஆதிக்குடிகளே முதலில் குடியேறினர். பிற்காலத்தில் கென்யா பிரித்தானியாவின் ஆதிக்கத்திட் குட்பட்டு பிரித்தானிய குடியேற்ற நாடாகியது. 'கென்ய மலை' யை அடிப்படை யாகக்கொண்டு அதுவரை 'கீன்யா' என அழைக்கப்பட்ட அந்நாடு பிரித்தானியர் களால் 'கென்யா' எனப் பெயரிடப்பட்டது. 1963 டிசம்பர் 12 ஆம் திகதி கென்யா பிரித்தானியரிடம் இருந்து விடுதலை பெற்று ஒருவருடத்தின் பின் கென்யா குடியரசாகியது. இந்நாடு பூமத்திய ரேகையில் அமைந்துள்ளதால் இதமான காலநிலையைத் தன்னகம் கொண்டுள்ளது. பெருந்தொகையான ஆசியர்கள் இந்நாட்டில் வசிக்கின்றனர். கென்யாவின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் 'கென்யா விஷன் - 2030' எனும் வேலைத்திட்டம் அந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



கென்யாவை உருவாக்கிய ஜோமோ கென்யாட்டா அந்நாட்டின் முதலாவது ஜனாதிபதியாக 1963 இல் தெரிவு செய்யப்பட்டார்.

## தேசிய மிருகம், பறவை, மலர்

சிங்கம் தேசிய மிருகமாகும். Lilac Breasted Roller எனும் பறவை அந்நாட்டின் தேசிய பறவை ஆகும். ஓர்கிட் மலர் அந்நாட்டின் தேசிய மலர்.



## இனங்கள்

| | |
|---|---|
| கிகுயு | 22% |
| லுண்யா | 14% |
| ஜுவோ | 13% |
| கலென்ஜின் | 12% |
| கம்பா | 11% |
| கிசி | 06% |
| மெரு | 06% |
| வேறு ஆபிரிக்கர்கள் | 15% |
| ஆபிரிக்கர் அல்லாதோர் | 15% |

## மொழி

ஆங்கிலம், கிஸ்வாஹிலி, சுதேச மொழி.

## சமயம்

கிறிஸ்தவம் - 82.5%

இஸ்லாம் - 11.1%, வேறு மதம் 1.7%

பாரம்பரியம் 1.6%

சமயமல்லாதோர் - 2.4%

சமயம் குறிப்பிடாதோர் - 0.7%

## அரசியல்



கென்ய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி

ஜனாதிபதி உஹுரு கென்யாட்டா

எதிர்க்கட்சித் தலைவர் - ரைலா ஒடின்கா



கென்யாவின் பாரம்பரிய நடனத்தின் ஒரு பகுதி.



கென்யாவின் 'மசைமாரா' கோத்திரத்தைச் சார்ந்த ஒரு போர்வீரர்.

'ஷீலிங்' என்பது அந்நாட்டின் நாணயமாகும்.

கென்யாவின் பாரம்பரிய உடை.






கென்யாவின் மிக உயரமான இடமாகிய 5,199 மீற்றர் உயரம் கொண்ட 'மவுன்ட் கென்யா' மலை.

காப்பி, உப்பு, வற்றாளைக்கிழங்கு, போஞ்சி, பாசிப்பயறு, இஞ்சி, சோளம், வாழை என்பன இங்கு பெருமளவில் பயிரிடப்படுகின்றன. பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் மாடுகள் வளர்க்கப்படுகின்றன.




## கென்யாவின் இயற்கை வளம்

சுண்ணக்கல், உப்பு, ஃப்ளூவொஸ்பார், இரத்தினக்கற்கள், சிங்க், டயடொமைட் மற்றும் ஜிப்சம்.



பல்வேறு வகையான இரத்தினக் கற்கள் அந்நாட்டில் உள்ளன.

கென்யாவின் விலங்குகள் தொடர்பான சுற்றுலாத்துறை உலகப்புகழ் பெற்றது.

இற்றைக்கு 200 மில்லியன் ஆண்டுகள் பழமைவாய்ந்த பாரிய முதலையின் எச்சம் ஒன்று 2004 ஆம் ஆண்டு கண்டுபிடிக் கப்பட்டது.

சட்ட விரோத யானைத் தந்த வர்த்தக மானது, அந்நாட்டில் நிலவும் பாரிய பிரச்சினை களில் ஒன்றாகும்.

பல பாரிய நீர்வீழ்ச்சிகள் அந்நாட்டில் உள்ளன. நீரின் வலு மூலமே மின்சாரம் பெறப்படு கின்றது.

உயர் ரக தேயிலை குறித்தும் கென்யா உலகப்புகழ் பெற்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்?

★ மனிதனுக்கு 'கொட்டாவி' ஏன் ஏற்படுகின்றது...?



**பதில்:** கொட்டாவி என்பது, உடலுக்கு ஒட்சிசன் ($O_2$) வாயு தேவையான அளவில் கிடைக்காதபோது, அதிக அளவில் வாயுவை உள்ளெடுப்பதற்கான உடலின் உத்தியாகவே கருதப்பட்டது. ஆனாலும், மூளை மற்றும் உடலை குளிர்மையாக்கும் செயலை கொட்டாவி செய்வதாக தற்போது ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். அதிகளவில் காற்றை உள்ளெடுத்துவிடும் நீண்ட சுவாச செயற்பாட்டின்போது, ஒரு கணினிக்கு எப்படி 'Cooling Fan' சூட்டைத் தணிக்க உதவுகிறதோ, அவ்வாறே மனிதனுக்கும் இந்த கொட்டாவி உதவுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



★ செயற்கை சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வது கூடாது என்று கூறப்படுகின்றதே. அது ஏன்?

**பதில்:** உணவுகளின் இயற்கை சுவையுடன் போதிய உப்பும், தேவையேற்படின் சீனியும் சேர்க்கப்படுவதற்கு மேலதிகமாக, அதன் சுவையை மேலும் அதிகரிப்பதற்காகச் சேர்க்கப்படும் பதார்த்தங்களையே செயற்கை சுவையூட்டிகள் என்கின்றோம். இந்த செயற்கை சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட தின்பண்டங்களை அதிகம் உட்கொள்வதால், மூளையின் நரம்புக் கலங்கள் அதிகளவில் தூண்டப்படுகின்றன. இது சிறுவர்களினதும் பெரியோர்களினதும் நடத்தைகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவதோடு, அதிகளவில் உட்கொள்ளும் ஆர்வத்தினையும் தூண்டுகின்றது. இதனால், உடல் எடை அதிகரிப்பு, ஞாபகமறதி, நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

# இன்றே செய்தால், இனிதே வாழலாம்...!





ஆரோக்கியமான உடல்நிலை சிறந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும். நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதனூடாக, ஆரோக்கியமான வாழ்க்கையை அனுபவித்து மகிழலாம். அதற்கான சில ஆலோசனைகள் இதோ...!

## நிறைய நீர் அருந்துங்கள்

தினமும் 7 முதல் 9 குவளை நீர் அருந்துங்கள். இவ்வாறு அருந்துவதனால், நம் உடம்பிலிருக்கும் கழிவுநீர் வியர்வையாகவும் சிறுநீராகவும் வெளியேற்றப்படுகிறது.


## அடிக்கடி, ஆனால் குறைவாகச் சாப்பிடுங்கள்

நீங்கள் ஒரு நாளைக்கு ஒருமுறை அல்லது இருமுறை மட்டுமே சாப்பிடும் பழக்கம் கொண்டவராக இருந்தால், இன்றே அதை மாற்றிக் கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஐந்து முறையேனும் மிகக்குறைந்த அளவில் உட்கொள்ளுங்கள்.

இதன்மூலம் குருதியில் க்ளுகோஸ் அளவு திடீரென்று அதிகமாவது தடுக்கப்படுவதால், நீங்கள் உடல் எடையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

## துரித உணவுகளை இயன்றளவு தவிருங்கள்

இயற்கைத் தன்மையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுப் பதப்படுத்தப்பட்டு வரும் உணவுகளில் விற்றமின்கள், நார்ச்சத்துக்கள் அடங்கியிருக்காது. எனவே, இவை போன்ற துரித உணவுகளை தவிருங்கள். இவற்றுக்கு மாறாக காய்கறிகள், புதிய பழங்கள், தூய பால், கீரைவகைகள், தானியங்கள், மீன் மற்றும் இறைச்சி வகைகள், பருப்பு வகைகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.




## சுறுசுறுப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள்

தினமும் சாதாரண நடைப் பயிற்சியை மேற்கொள்ளுங்கள். படிகளில் ஏறுங்கள். குனிந்து-வளைந்து வேலை செய்யுங்கள். எந்நேரமும் சுறுசுறுப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள். இவ்வாறு இருப்பதனால், நோய்கள் உங்களை நெருங்காது.

# இவ்வார கார்ட்டூன் படம்







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 10, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org